1367

தொகுதி 4.] 1925வரு ஆகஸ்டுமீ 1௳ [பகுதி 7.

# மனமோகினி.

ஆக்கியோர்
ஆரணி. குப்புசாமி முதலியார்

பிரசுரகர்த்தர்
நா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலயம், சென்னை.

14 SEP 192
MADRAS

# மனமோகினி

**ஓர் மாதாந்த சஞ்சிகை.**

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நமது "ஆனந்த போதினிச்" சந்தாதாரர்களிற் பலர் அச்சஞ்சிகையில், ஒவ்வொரு நாவலும் சிற்சில சஞ்சிகைகளில் விரைவில் முடிவு பெறும்படி, சில நாவல்களை வெளிப்படுத்தி வரவேண்டுமென்று அடிக்கடி கேட்டு வருகின்றார்கள். அச்சஞ்சிகை பற்பல விஷயங்களுக்கும் இடந் தர வேண்டியதா யிருத்தலின், அதில் ஒவ்வொரு மாதத்திற்கும் இரண்டு மூன்று பக்கங்களே நாவல் வெளியிடக்கூடியதா யிருக்கிறது. அதனால் நம் நண்பர்களின் விருப்பம் நிறைவேறக் கூடாததாகிறது. ஆதலின் நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது மேற்கூறியவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதோடு மற்றைய தமிழபிமானிகட்கும் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று இதனை 1922௵ பிப்ரவரி௴ 1௳ முதல் ஆரம்பித்தோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாக வந்து ஆறு மாதங்களுக்கொரு முறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இப்போது மகா அற்புதம் பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவழத்தீவு" என்ற நாவல்கள் முடிவுபெற்று "ஞானசெல்வாம்பாள்" என்ற நாவல் தொடங்கப்பட்டிருக்கிறது. முடிவான இரண்டு நாவல்களும் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ள வேண்டுமென்றி சஞ்சிகைகள் கிடையா. "ஞானசெல்வாம்பாள்" வேண்டியவர்கள் சந்தாதாரராகச்சேர்ந்து சஞ்சிகைபெற்றுக்கொள்ளவேண்டும். இச்சஞ்சிகை கிரௌன் 80-பக்கங் கொண்டது. வருஷ சந்தா ரூ. 2-8-0 இரண்டரைதான். வெளிநாட்டிற்கு 3—0—0. அடியிற் கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன் பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

☞ முன் பணம் அனுப்பினால் 2—8—0யும், மணியார்டர் கமிஷன் 1-அணாவுமாகும். வி-பி-யில் ரூபா 2—13—0 ஆகும்.

இச்சஞ்சிகை அநேக நாவல்கள் இயற்றிய ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் அவர்களால் எழுதப்பட்ட நாவல்களடங்கியது. அவருடைய நாவலின் போக்கு எல்லோருக்குந் தெரிந்திருக்குமாகையால் இதன் மாதிரி காப்பி அனுப்பப்படமாட்டாது.

**மானேஜர்: "ஆனந்த நிலையம்"**

தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

THE REGISTRAR OF BOOKS 9 OCT 1925 MADRAS

மையாகவே மன்னித்து விட்டேன். ஆனால் - ஆனால்" என்பதற்குள்,

பிரபு:—"அய்யா! தாங்கள் இவளை ஒரு நிபந்தனையுமின்றிப் பூரணமாக மன்னிக்கிறீர்கள் என்பதை மறக்கவேண்டாம்" என்றார்.

அப்போது பாராங்குசம்பிள்ளைக்குப் பிரபு முன்பு கூறிய ஒவ்வொரு வார்த்தையும் நினைவிற்கு வந்தது. அவர் மனம் முழுமையும் கரைந்து விட்டது. அவர் தன் பேத்தியை யணைத்துக்கொண்டு கண்ணீர் விட்டு,

"அந்தோ! என் கண்மணியே! நான் உனக்குப் பெரிய அநீதம் செய்து விட்டேன். உனக்கு மிக்க விசனத்தையும் துன்பத்தையும் உண்டாக்கிவிட்டேன். நீ இனி என்னிடமே வந்திருக்கவேண்டும். உன் சுகத்திற்கு வேண்டிய யாவும் நான் செய்வேன். அந்தோ! நான் உனக்குப் பெருங் கொடுமை செய்து விட்டேன். நீ என்னை மன்னிக்க வேண்டும்..." என்று பிரலாபிக்கத் தொடங்கினர்.

உண்ணுமுலை:—தாத்தா! தாங்கள் என்னைக் குரூரமாக நடத்தவில்லை. நான் செய்தது குற்றமே. ஆ! இப்போது தங்கள் வாக்கினின்றும் வரும் இந்த அன்பான வார்த்தைகளே எனக்குக் கோடி பவுன். இதுவே யெனக்கு வேண்டியது.

பராங்குசம் பிள்ளை:—ஆ என் கண்மணியே! நீ இனி என்னைவிட்டுப் பிரியலாகாது. உன் முலாடையைக் கழற்றி வை.

186502

உண்ணுமுலை:—"தாத்தா! நான் எப்படி இப்போது தங்களிடமே நின்றுவிடுவது? என் கணவன் இன்னும் மன்னிக்கப்படாமலிருக்கையில்" என்றாள்.

அப்போது பிரபு:—"குழந்தாய்! உன் கணவன் மன்னிக்கப் படாமலில்லை. உன் பாட்டன் தன் உதாரச் செய்

கையை அரை குறையாகச் செய்யவில்லை. பூரண மாகவே செய்கிருர். உங்கள் இருவரையுமே மன் னித்து இருவரையுமே யேற்றுக்கொள்கிருர்" என்ருர்.

உண்ணுமுலை ஆவலோடு தன் பாட்டனுரை நோக்கி "ஆ தாத்தா! இது உண்மைதானு? என் கணவனை யேற் றுக்கொள்ளுகிறீரா? அவர் உமது விஷயத்தில் மிக்க மரியாதை வைத்திருக்கிருர். எனக்கு மிக்க அன்பார்ந்த கணவர்" என்ருள். வயோதிகர் "அந்தோ! உனக்கு எதையும் இனி மறுக்கேன்" என்று கூறிவிட்டுத் தேம்பித் தேம்பி யழுதார். அச்சமயம் உண்ணுமுலை பிரபுவினருகிற் சென்று "அய்யா! என் உயிருள்ள மட்டும் தங்களிடம் நன்றி மறக்கமாட்டேன். தாங்கள் செய்தது பெரிய உதவி" என்ருள்.

பிரபு:—"குழந்தாய்! நீ பூரண க்ஷேமத்தையும் சந்தோஷத் தையும் அடையவேண்டும் என்பதே என் விருப்பம்" என்று கூறிவிட்டுப் பராங்குசம் பிள்ளையை நோக்கி "அய்யா! உமது குடும்ப விஷயத்தில் தலையிட்டதற் காக என்மேல் கோபம் வைக்கமாட்டீரே. நாம் இரு வரும் சினேகராக விருக்கலாமல்லவா?" என்ருர்.

பராங்குசம் பிள்ளை:—அய்யா! நடந்த விஷயங்களைப்பற்றிச் சிந்திக்கவே வேண்டாம். நாம் இனி யெப்போதும் நண்பர்களே. என் அருமைப்பேத்தி யென்னிடம் வந்து சேர்ந்துவிட்டதால் என் மனம் பூரண நிம்மதி யடைந்தது.

பிரபு:—"அய்யா! இப்போது தாங்கள் இக்கன்னிகையை மன்னித்துவிட்டது மட்டும் போதாது. இவள் நல்ல அந்தஸ்திலிருக்கும்படி செய்யவேண்டும். உமக்காக இவள் நெடுநாள் கஷ்டப்பட்டதோடு உமது வெறுப் பினல் இவள் பட்ட துயரத்திற்குச் சரியாக ஈடுசெய்ய

வேண்டும். ஆதலின் உமது ஆஸ்தி முழுமையும் இவளுக்கே வைத்துவிட வேண்டும்" என்றார்.

உண்ணுமுலை ஆத்திரத்தோடு "அய்யா! இவருடைய ஆஸ்தியில் எனக்கொரு காசுகூட வேண்டியதில்லை. ஆஸ்தி முழுமையும் கிருஷ்ணராஜனுக்கே சேரட்டும். என்னையும் என் கணவரையும் இவர் வாக்கால் ஆசிர்வாதம் செய்தால் அதுவே போதுமானது" என்றாள்.

இம்மொழிகளைக் கேட்ட பிரபு மிக்க வியப்பும் சந்தோஷமுமடைந்து "ஆ இத்தகைய உதாரகுணமுடைய உன் நடக்கை வீண் போகலாகாது. அந்த ஆஸ்தியை வேண்டாமென்று அபிப்பிராயங் கூறவேண்டியவள் இச்சந்தர்ப்பத்தில் நீ யல்ல" என்று கூறி அவளை யருகிலழைத்து "குழந்தாய்! மிக்க உதார குணமும் சத்தியமுமுடைய உன் கணவன் தன் தந்தையிடமிருக்கும் சொத்து முழுமையும் இழந்துவிடப் போகிறான். அவன் அதை யனுபவிக்கச் செய்வதே நியாயம்" என்றார்.

அதன்மேல் உண்ணுமுலை "என் வரையில் உண்மையாகவே என் பாட்டனுடைய சொத்தை நாமடையவேண்டுமென்று விருப்பம் சற்றுமேயில்லை. ஆனால் இப்போது தாங்கள் கூறிய விஷயம் சிந்திக்கத்தக்கதே" என்றாள். அப்போது முன்பு தன் கணவன் தன்னை மணம்புரிய விரும்புவதாகக் கூறியபோது சொல்லிய விஷயங்களெல்லாம் அவள் நினைவிற்கு வந்தன.

பிரபு பராங்குசம் பிள்ளையை நோக்கி, "அய்யா! என் உமது பிரியமென்ன? உமது பேரன் கிருஷ்ணராஜன் மணம் செய்துகொண் டிருக்கும் பெண்ணின் தந்தை ஜனகபுரியிலுள்ள மிக்க செல்வவந்தரான வர்த்தகர். அவர் இறந்துபோனதும் அவருடைய திரண்ட செல்வம் முழுமையும் கிருஷ்ணராஜே அடைவான். அவன் உம்மிலும்

மிக்க செல்வவந்தனுவான். ஆதலின் உமது சொத்து முழு மையும் உண்ணுமுலைக்கே வைத்துவிடும்" என்றார்.

பராங்குசம்பிள்ளை:—நீர் எப்படி என்னை நடந்துகொள்ளச் சொல்லுகிறீரோ அப்படியே நடந்துகொள்கிறேன். இப்போது நான் பூராய் உமது பிரியப்படி நடந்து கொள்ள ஆயத்தமாக விருக்கிறேன். என் பேத்தி என்னிடம் வந்துவிட்டதே எனக்குப் போதும்" என்று கூறிவிட்டு உண்ணுமுலையை நோக்கி, "குழந் தாய்! நீ இனி என்னைவிட்டுப் போய்விட மாட்டாயல் லவா? என்னிடமே யிருப்பாயல்லவா?" என்றார்.

உண்ணுமுலை தன் பாட்டனை யாலிங்கனம் செய்து கொண்டு "தாத்தா! இனி உம்மைவிட்டுப் பிரியேன்" என்றாள்.

பிரபு:—சரி; உமது சொத்து முழுமைக்கும் உமது பேத்தி யாகிய உண்ணுமுலையே உரிமைக்காரி என்று எழுதி ஒரு சாசனம் பிறப்பித்துவிடும்.

கிழவர்:—"ஆம். ஆம். சொத்து முழுமைக்கும் உண்ணு முலையே. யாவற்றிற்கும் இவளே சுதந்தரக்காரி. எதோ கண்மணி! அதோ அந்த மேஜைமேல் கடிதம் முதலிய எழுது கருவிகளிருக்கின்றன. அவற்றை யெடுத்துக்கொண்டுவா" என்றார்.

உண்ணுமுலை யவ்வாறே யெடுத்துவந்து தன் பாட்ட னிடமளித்தாள். கிழவர் பிரபுவை நோக்கி "கணபதிப் பிள்ளை! தாங்கள் எழுதலாமே. நான் கையொப்பம் வைத்து விடுகிறேன்" என்றார். பிரபு "தாங்களே எழுதி விடலாம். முன் எழுதியிருக்கும் மரண சாசனம் யார் எழுதியது?" என்றார்.

கிழவர் "அது முழுமையும் நானே எழுதினேன்" என்றதே, பிரபு "சரி; இதையும் தாங்களே யெழுதிவிட

லாம். அதிகம் ஒன்றும் வேண்டாம். 'சிங்காரம் பிரபுவின் மனைவியும் என் பேத்தியுமாகிய உண்ணுமுலையே என் சொத்து முழுமையும் அடையவேண்டும்; இதனால் இதற்கு முன் எழுதப்பட்டிருந்த சாசனம் இரத்து செய்யப்பட்டது' என்று இவ்வளவே எழுதவேண்டும்" என்றார்.

கிழவர் "ஆகா! அப்படியே எழுதுகிறேன். நீர் கையொப்பம்-சாக்ஷிக் கையொப்பம் வைக்க வேண்டும்" என்றார். பிரபு "ஆகா; நானும் சுந்தரம்மாளும் இருவரும் போடுகிறோம்" என்று கூறிவிட்டு உண்ணுமுலையை யருகிலழைத்து மெதுவாய் "குழந்தாய்! உனக்கொரு இரகசிய சங்கதி கூறுகிறேன். இப்போது பத்திரத்தில் கையொப்பம் வைப்பது வேறு பெயராக விருக்கக் காணும்போது நீ திடுக்கிட்டு மிக்க வியப்படைவாய். ஆகையால் இன்னும் சற்று நேரங்கழித்து வெளியாகும் சங்கதியை இப்போது முன்னடி யுனக்குக் கூறுகிறேன். என் பெயர் கணபதிப் பிள்ளையல்ல. உனக்கு மிக்க அன்பார்ந்த சினேகி ஒரு கன்னிகை யிருக்கிறாளல்லவா-ஞானம்பாள். நான் அவளுடைய தந்தை. என் பெயர் மச்சநாதம்பிரபு" என்றார்.

இதைக் கேட்டதே உண்ணுமுலைக் குண்டான வியப்பிற்கும் சந்தோஷத்திற்கும் அளவேயில்லை. அவள் "பிரபுவே! நான் இச்சங்கதி நேர்ந்ததற்காக அளவுகடந்த சந்தோஷமடைகிறேன். ஏனெனில் என் அன்பார்ந்த ஞானம்பாள் இனி மிக்க நிம்மதியோடும் க்ஷேமத்தோடும் வாழுவாள்" என்றாள். பிரபு "இனி நீ சுந்தரம்மாளுக்குச் சங்கதிகூறி அந்தம்மாளையும் அழைத்துவா" என்றார்.

உண்ணுமுலை அவ்வாறே சென்று சுந்தரம்மாளிடம் பிரபுவைப்பற்றிய சங்கதியைக் கூறியபோது அவளும் மிக்க வியப்பும் சந்தோஷமுமடைந்தாள். பிரபு அச்சங்கதியைத் தம் பாத்தியதை பகிரங்கமாக வெளிப்படும் வரையில்

மிக்க இரகசியமாகவே வைத்திருக்க வேண்டுமென்று கூறினர்.

பராங்குசம் பிள்ளை பத்திரத்தை யெழுதி முடித்தார். அதே நிமிடம் உண்ணுமுலையும் சுந்தரம்மாளும் அறைக்குள் வந்தார்கள். வயோதிகர் உண்ணுமுலையை நோக்கி ஆயாசத்தோடு "குழந்தாய்! மிக்க களைப்பாக விருக்கிறது. கொஞ்சம் ஒயின் கொண்டுவா சீக்கிரம்" என்று வாய் குழறிக்கொண்டே கூறினர். அவர் முகத்திலுண்டாகி யிருந்த விகாரத்தைக் கண்ட உண்ணுமுலை மிக்க திகி லடைந்து "அய்யோ! தாத்தா! என்ன அசௌக்கியம்?" என்று அலறியோடி ஒயினை யெடுத்துவந்து அவரைத் தன் மார்மேல் சாத்திக்கொண்டு கொஞ்சம் ஒயின் குடிப்பாட்டி னள். சுந்தரம்மாள் விசிறினள்.

கிழவர் கொஞ்சம் சமாளித்துக்கொண்டு, "ஆ! இப் போது கொஞ்சம் சுகமாக விருக்கிறது. பரவாயில்லை. என்ன சங்கதி? ஆ! மரணசாசனம். எதோ கொடு கையொப்பம் வைத்துவிடுகிறேன்" என்றார்.

உண்ணுமுலை பிரபுவிடம் இரகசியமாய் "அந்தோ! இது என் பாட்டனருக்கு எதேனும் ஆபத்தை யுண்டாக்கி விடுமோ?" என்றாள். பிரபு, "இல்லை யில்லை. இப்போதவர் சற்று சௌக்கியமாகவே யிருக்கிறார். ஆயினும், நாம் இக் காரியத்தில் ஆலசியம் செய்யலாகாதென்பதற்கு இதுவே எச்சரிக்கையாகும்" என்றார்.

அதற்குள் பராங்குசம் பிள்ளை கையெழுத்திட ஆரம் பித்து ஒரு எழுத்து எழுதியதும் அவருடைய சிரம் சாய்ந்து விட்டது. உண்ணுமுலை திகில்பட்டு அலறிக் கொண்டு குனிந்து பார்த்தபோது வாயிலும் மூக்கிலும் இரத்தம் வடிவதைக்கண்டாள். உடனே பெருங் குழப்பமுண்டாகி யது. வயோதிகர் மூர்ச்சையான நிலைமையில் சவத்திற்குச்

சமதையாக இன்னொரு அறைக்குக் கொண்டுபோகப்பட்டார்.

## 132-வது அத்தியாயம்.

லாயர் தம்புசாமிப் பிள்ளையின் படுமோசச் செய்கை—துளசிங்கம் பிரபு தம் ,புத்திரனை நிராகரித்தல்—அநியாய ஏற்பாடுகள்.

இப்போது நாம் ஞானம்பாள் வீட்டிலிருந்து வெளிப்பட்ட தம்புசாமிப் பிள்ளையைக் கவனிப்போம். அவன் அங்கிருந்து நேராகத் துளசிங்கம்பிரபுவின் மாளிகைக்குச் சென்றான். அங்கு சென்று வண்டியை விட்டிறங்கிய தும் கதவைத்திறந்து தன்னை யுள்ளே விட்ட வேலைக்காரனை நோக்கி, "உன் எஜமானர் எப்படி யிருக்கிறார்? சற்று சுகந்தானா ?" என்று கேட்டான்.

காவலன்:—அந்தோ! அவர் இன்னும் படுக்கையிலேயே யிருக்கிறார். தாங்கள் இங்கு கொஞ்சக் காலமாகக் காணப்படவில்லை. அதாவது பராங்குசம் பிள்ளை சிறைச்சாலையிலிருந்து விடுதலை யடைந்தது முதல் தாங்கள் இங்கு வரக்காணோம். ஆ! அச்சங்கதி நமது பிரபுவுக்குப் பெரிய இடியாய்விட்டது. அவர் சங்கதியைக் கேட்டபோது.

லாயர்:—"கேட்டபோது? என்ன எதையும் ஒளிக்காமல் கூறு. என் மேல் கோபித்துக்கொண்டாரோ?" என்று கூறி அவன் கரத்தில் கொஞ்சம் பணமளித்தான்.

காவலன்:—ஆ! அதைக் கேட்டதும் மிக்க கோபங்கொண்டார். தாங்கள் பணத்திற்காக அவருக்கு வேண்டுமென்றே பெருந்துரோகம் செய்ததாகக் கருதுகிறார். தங்கள்மேல் மிக்க கோபம் கொண்டார்.

லாயர்:—இவ்விஷயத்தின் உள் அந்தரங்கம் வேறிருக்கிறது. நான் உனது எஜமானரைக்கண்டு நேரில் விஷயத்தைக் கூறினல் அவர் பூரணதிருப்தியடைவார். உன் எஜமானர் புத்திரனுகிய சிங்காரம் பிரபு இங்கிருக்கிருரா?

காவலன்:—அவர் இப்போதிங்கில்லே.

லாயர்:—அவர் இப்போது அதிகமாக வீட்டில் தங்குவதில்லே போலும்.

வேலேயாள்:—"ஆம். இப்போது அவர் அதிகமாக வெளியில்தான் இருக்கிருர். ஆனல் தம் தந்தையைப்பற்றி அசட்டையாயில்லே. தந்தை எக்காலத்தில் அவரைத் தன்னருகிலிருக்க விரும்புகிருரோ அப்போதெல்லாம் தந்தையைவிட்டுப் பிரிவதேயில்லே. தந்தையை மிக்க அக்கரையோடு கவனிக்கிருர். அவர் நடக்கை யிப்போது அடியோடு மாறிவிட்டிருப்பது யாவர்க்கும் மிக்க வியப்பாகவே யிருக்கிறது. முன் போல் கடன்காரர் யாரும் அவரைத் தேடிக்கொண்டு வருவதில்லே" என்றுன்.

லாயர்:—இப்போது உன் எஜமானரிடம் யாரும் பேசிக்கொண்டில்லேயே?

காவலன்:—"இல்லே. ஒருவருமில்லே" என்றுன்.

அதன் மேல் அவன் பிரபுவினிடம் சென்று லாயர் தம்புசாமிப்பிள்ளே வந்திருக்கிற சங்கதியைக் கூறினுன். அதைக்கேட்ட பிரபு "ஆ! தம்புசாமிப்பிள்ளேயா?" என்று சற்று சிந்தித்து "ஆம் அவனேக்கண்டு பேசவேண்டியதே. உள்ளே வரும்படி கூறு" என்றுர்.

இரண்டு நிமிடங்களுக்குள் வேலேக்காரன் வந்து லாயரைப் பிரபுவிடம் அழைத்துக் கொண்டு சென்றுன். லாயர் பிரபுவுக்கு வந்தனமளித்ததும் பிரபு, "அய்யா!

எங்கே வந்தீர்? இன்னும் என் வியாச்சியங்களை யேற்றுக் கொண்டு என்னைத் துரோகம் செய்வதற்கா?" என்றார்.

லாயர்:—நான் தங்களுக்கு ஒருபோதும் துரோகம் செய்ய வில்லை.

துளசிங்கம் பிரபு:—வேண்டாம். அப்படிக் கூறவேண்டாம். அய்யா! நீ அக்கிழவன் பராங்குசம் பிள்ளையைச் சிறைச் சாலையிலிருந்து வெளிப்படும்படி செய்து விட்டாய்.

லாயர்:—"பிரபுவே! இது உண்மையல்ல. நான் இதற்கு மேலும் அப்பத்திரத்தை வைத்துக்கொண்டிருப்பது எனக்கே பெருங்கெடுதியாகும். எப்போதும் அப் படியே நடக்கமுடியாது. அக்கிழவனிடம் எப்படியோ பெருந்தொகைப் பணம் அகப்பட்டு விட்டது. அந்த வியாச்சியம் என்னிடமிருந்து பிடுங்கப்பட்டது. இப் போது அவனுக்காக வேலை செய்யும் வக்கீல்கள் பெரு முயற்சி செய்கிறார்கள். நான் இன்னும் அப்பத்தி ரத்தைக் கொடுக்காதிருந்தால் அவர்கள் தக்கவிவகாரம் செய்து நான் அப்பத்திரத்தைக் கொடுக்கும்படி பல வந்தப் படுத்துவார்கள். அப்போது நான் இதுகாறும் தங்களுக்கு உதவியாயிருந்த சங்கதி வெளிவந்துவிடும். எனக்குப் பெரிய அழிவு நேரிடும். அவையாவும் யோசித்தே நான்கொடுத்து விட்டதுபோல் கொடுத்து விட்டேன்" என்றான். நீலாட்சியிடம் தனக்குப் பெருந் தீங்கை யுண்டாக்கத்தக்க ஒரு பத்திரம் அகப்பட்டுக் கொள்ள அதற்குப் பயந்தே பராங்குசம் பிள்ளையின் விடுதலைக்கு அவசியமான பத்திரத்தைக் கொடுத்து விட்ட உண்மையை மறைத்து விட்டான்.

யாவுங்கேட்ட பிரபு சாந்தமடைந்து "சரி; நீ கூறுவது ஒருவழியில் ஒத்துக்கொள்ளத் தக்கதே. அதனால் தான் நீ

கொடுத்து விட்டிருப்பாய். ஆனால் நீ ஏன் அதுமுதல் என்னிடம் வரவில்லை?" என்றார்.

லாயர்:—எனக்கு மிக்க வேலையாயிருந்தது ஒரு காரணம். இரண்டாவது இனி நான் இங்கு வருவதால் ஒருபயனு மில்லை. மூன்றாவது காரணம் தங்கள் குமாரரை யிங்கு சந்திக்க எனக்கு மிக்க பயமாகவிருக்கிறது. ஏனெனில் நான் தங்களுக்கு உளவாகவிருந்த விஷயத்தில் அவருக் குச் சந்தேகம் தோன்றி விட்டிருந்தால் சற்றும் பின் வாங்காமல் என்னை அவமானப்படுத்தி விடுவார்.

பிரபு கோபத்தோடு "என்ன? என் புத்திரன் இன்னும் அப்பராங்குசம் பிள்ளையின் பட்சத்தில் பரிந்து பேசுவா னென்று நினைக்கிறாய்? நான் முன்பு கூறவில்லையா உன் னிடம்?" என்றார்.

லாயர்:—ஆம் ஆம். எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. இனி யவர்களுக்காகப் பரிந்து பேசமுயன்றால் சபித்து விடுவதாகச் சத்தியம் செய்து கொண்டீர்கள்.

பிரபு:--ஆம். இப்போது அக்கிழப்பயலால் நான் என் ஆஸ்தி முழுமையும் இழந்து பிச்சைக்காரனாகி விடவேண்டும்.

லாயர்:—தங்கள் வக்கீல்கள் என்ன சொல்லுகிறார்கள்?

பிரபு:—"அவர்கள் நம்பகமாய்க் கூறவில்லை. பேசவே அஞ்சுகிறார்கள். அய்யோ கடவுளே! நான் அடியோடு இவ்வியாச்சியத்தைத் தோற்று விட்டால்......" என்று கூறிவிட்டுச் சற்று நேரம் மௌனமாக விருந்தார்.

பிறகு லாயர் ஏதோ சிந்தனையிலிருப்பதைக் கண்டு, "நீ சிந்திப்பது எனக்குத் தெரியும். வியாச்சியம் தோற்று விட்டால் நான் அடியோடு யாவற்றையுமே யிழந்து விடு வேனு வென்று சந்தேகப் படுகிறாய். இந்தச் சிந்தனையே என்னைக் கொன்று விடுகிறது. நான் யாரிடம் ஆலோசனை

செய்வது. நீ எனக்குத் துரோகம் செய்தாயென்று நான் கருதியிருந்ததால் உன்னை யழைக்கவும் பிரியமில்லாதிருந்தது. என் வக்கில்களிடம் இதைப்பற்றிப் பேச எனக்குப் பிரியமில்லை; ஏனெனில் நமது ஊழலை வெட்டவெளியாகக் காட்டி விடுவதாகும். இப்போது நீ வந்தது எனக்குச் சந்தோஷமாக விருக்கிறது" என்றார்.

லாயர்:—இதைக் கேட்க மிக்க சந்தோஷமடைகிறேன். ஏனெனில் என் ஆலோசனையால் ஏதோ பயனுண்டாகும் போல் தோன்றுகிறது.

பிரபு:—நான் கூறுவதைக் கவனமாகக் கேள். வியாச்சியம் தோல்வியடைந்தால் என் பூஸ்திதிமுழுமையும் போய் விடும். இருக்கிற ரொக்கப்பணம் வக்கீல்களுக்குக் கொடுக்கவே சரியாயிருக்கும். அப் பணத்தைக் கொடுத்துவிட்டால் நான் பிச்சைக்காரனை மாதிரியே. என் புத்திரனுக்கு ஒன்றுமேயிராது; இதுவரையில் அவனைச் செல்வாக்கில் வளர்த்துவிட்டு இப்போது இச்சங்கதியை யவனிடம் எப்படிக் கூறுவேன்.

லாயர்:—ஆம். மிக்க கஷ்டமான நிலைமையேயாகும்.

பிரபு:—மிக்க கஷ்டமே. என் நீ யொரு ஆலோசனை சொல்லலாகாதோ?

லாயர்:—தங்களிடம் ரொக்கம் என்னவிருக்கும்?

பிரபு:—ஒரு விடத்தில் பத்தாயிரம் பவுன் இருக்கிறது. இந்தச் சிறுவீடு என் சொந்தமே.

லாயர்:—என்ன விலைக்குப் போகும்?

பிரபு:—இதைச்சேர்ந்த பனிரண்டுகாணி பூமியோடு பத்தாயிரம் பெறும். இன்னும் சாமான்கள் நகைகள் முதலிய யாவும் சேர்த்தால் பதினைந்தாயிரம் பெறும்.

லாயர்:—சரி. இரண்டு மூன்று நாட்களுக்குள் தங்களுக்கு விரோதமாகத் தீர்ப்பளிக்கப்பட்டால் தாங்கள் இரு

பத்தைந்தாயிரம் பவுன் சேகரம் செய்வீர்கள். ஆனால் கொடுக்கவேண்டியவர்களுக்குக் கொடுத்து விட்டால் ஒரு காசு மில்லாமற்போகும். இதுவே வெள்ளையாகத் தெரியும் விஷயம்.

பிரபு:—ஆம் ஆம். இதுவே சங்கதி. நான் வெளிநாட்டுக்குச் சென்று கொஞ்சக்காலமிருந்தால்?

லாயர்:—இது நடவாத காரியம். தாங்களோ மிக்க வியாதியுற்றிருக்கிறீர்கள். இப்போது யாத்திரை செய்தால் பிராணனுக்கே ஆபத்து நேரிடும்.

பிரபு:—இதே துர் அதிஷ்டம். நீ கூறுவது உண்மையே.

தம்புசாமிப்பிள்ளை:—ஆம். தங்கள் கடன்காரர்கள் இதையறிந்தால் உடனே தங்கள் சொத்துக்களைக் கைப்பற்றிக் கொள்வார்கள்.

பிரபு:—ஆம். யாரேனும் நம்பகமானவர்கள் அவைகளை யடமானம் எழுதிவைத்துக்கொண்டு......

லாயர்:—ஆம். அவற்றைத் தங்கள் சுவாதீனம் செய்து கொண்டு பிறகு தங்களுக் களித்துவிடவேண்டும். அத்தகைய நம்பக முடையோர் யார் இருக்கிறார்கள்? எனக்குத் தெரிந்தவரையில் தங்களுக்கு அத்தகைய சிநேகர் அல்லது சுற்றத்தார் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

பிரபு:—ஆ! அப்படிப்பட்ட ஆள் மட்டும் அகப்பட்டால் அவர்களுக்கு நான் நல்ல பரிசளிப்பேன்.

லாயர்:—பிரபுவே! எனக்கு நண்பானவர்களில் அல்லது என் கட்சிக்காரரில் அத்தகைய நம்பகமுடையோர் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆயினும் நமக்குள் இருந்த பழைய நட்பைக் கருதி...பிரபுவே-நான் ஒரு யோசனை கூறுகிறேன். அதாவது நான் பன்முறை தங்கள் பணத்தை யென்வசம் வைத்துக்கொண்டிருந்

திருக்கிறேன். எனக்குப் போதுமான செல்வமிருப்ப தால் நான் தங்களுக்கு மோசம் செய்யமாட்டே னென்று தாங்கள் நம்பலாகும்.

பிரபு:—ஆ! நீமட்டும் இவ்வளவு உதவி செய்வதாயின் என் மனதிற்கு எவ்வளவோ நிம்மதியுண்டாகி விடும். ஆ! இத்தகைய உதவிமட்டும் கிடைத்தால் நான் கூடிய வரை சமாளித்துக் கொள்வேன்.

அச்சமயம் இவர்களை யறியாது அறைக்குள் வந்த சிங்காரம், பிரபுவின் மஞ்சத்தின் பின்பக்கமிருந்து "அப்பா! தாங்கள் இத்தகைய காரியம் செய்யவே கூடாது. செய்ய லாகாது. இது தங்கள் கௌரவத்திற்குத் தக்கதல்ல" என்று கூறிக்கொண்டே அவர்கள் முன் வந்து நின்றான்.

பிரபு திடீலென்று தம் புத்திரன் வந்து இவ்வாறு கூறியதைக் கேட்டதும் ஆத்திரமடைந்து "ஆ! நீ இங்கு வந்து உற்றுக்கேட்டுக்கொண்டா விருந்தாய்?" என்றார்.

சிங்காரம்:—தந்தையே! நான் உற்றுக்கேட்க வரவில்லை. அத்தகைய் வேலை செய்பவனல்லவென்று தங்களுக்கே நன்றாகத் தெரியும். நான் தங்களைக் காணவந்தேன். தாங்கள் நித்திரை செய்வதாயின் கூடாலென்று கத வைத் திறந்தால் தங்களுக்குத் தொந்திரை கொடுத்த தாகும் என்று கருதிச் சந்தடிசெய்யாமல் மெதுவாகக் கதவைத் திறந்தேன். உடனே தாங்களும் இதோ விருக்கும் இம்மனிதனும் சம்பாஷிப்பது என் செவி யில் வீழ்ந்தது. அதைக் கேட்டதும் நான் பிரமித்து அங்கேயே நின்றுவிட்டேன்.

பிரபு:—நீ என்ன சங்கதி கேட்டாய்? என்ன கேட்டாய்? ஆயினும் அவசியமில்லை. வியாஜ்ஜியம் என் பட்சத்தில் ஜெயமடையாதென்றும் நான் அழிந்துபோக வேண் டியதே யென்றும் தெரிந்துகொண்டா யல்லவா?

சிங்காரம்:—தந்தையே! செல்வத்தில் அழிந்துபோவீர். ஆனால் கௌரவத்திலும் சத்தியத்திலும் அழிந்து போகவில்லை. தங்கள் பாக்கி முழுமையும் பைசல் செய்துவிடப்படவேண்டும். அதில் சூது கூடாது.

பிரபு மிக்க ஆத்திரத்தோடு:—"அடே! என்ன நீ கூறுவது? கடைசியில் நாம் பிச்சைக்காரராய்ப் போவதா? இல்லை யில்லை. நானும் தம்புசாமிப்பிள்ளையும் இதைப்பற்றி நல்ல ஏற்பாடுசெய்ய ஆலோசிக்கிறோம். இப்போது இங்கே வேறு யாரும் இருக்கவேண்டாம்; நீ வெளி யில் செல்" என்றார்.

சிங்காரம்:—தந்தையே! இல்லை. இத்தகைய சமயத்தில் நான் இங்குதானிருப்பேன். தங்களை இம்மனிதனோடு தனியே விட்டிருக்கமாட்டேன்.

லாயர் சிங்காரம் பிள்ளையை நோக்கி "அய்யா! நீர் என்னை யிவ்வாறு இரண்டொருமுறை அலட்சியமாகப் பேசி யிருக்கிறீர்" என்றான்.

சிங்காரம்:—"அய்யா! உம்மோடு சம்பாஷிக்கவே எனக்குச் சந்தர்ப்பம் வாய்க்காமலிருந்தால் நான் மிக்க திருப் தியோ டிருப்பேன். உம்மைப்பற்றி நான் கொண் டிருக்கிற அபிப்பிராயத்தைப் பகிரங்கமாக வெளியிடா திருக்க வேண்டுமாயின் இந்த இடத்தை விட்டெழுந்து போய்விடும்" என்றான்.

இதைக் கேட்டதே பிரபு மிக்க கோபமடைந்து "என்ன? என் எதிரிலேயே—என் அறையிலேயே நின்று இப்படிக் கட்டளையிடுகிறாயா — இது பொறுக்கொணாத் துஷ்டத்தனம். தம்புசாமிப்பிள்ளை என் நேர்த்தியான நண்பர்" என்றார்.

சிங்காரம் வெறுப்போடு "பேஷ். நண்பர்—நல்ல நண் பர் — இல்லை யில்லை — தந்தையே — உம் கடன்காரரை

யேமாற்றி அவர்களை மோசம்செய்யும்படி உமக்கு ஆலோசனை கூறுகிறவன்--அப்படிப்பட்டவன் ஒருபோதும் சினேகனுகமாட்டான்" என்று கூறிவிட்டு லாயரை நோக்கி "போ அய்யா வெளியில்! போ வெளியில்" என்றான்.

பிரபு:—அடே! நீ இங்கே எஜமானல்ல. தம்புசாமிபிள்ளை! நீர் இங்கேயேயிரும். இந்த அதிகப் பிரசங்கியின் வார்த்தைகளை இலட்சியம் செய்யாதீர்.

லாயர் மிக்க அகங்காரத்தோடு "நான் அதைச் சட்டை செய்யவேயில்லை." என்றான். சிங்காரம் லாயரை நோக்கி "என் எதிரில் இவ்வளவு அகங்காரமா காட்டுகிறாய்! இந்த நிமிஷம் இதை விட்டெழுந்துபோ. உன்னைப்போன்ற கள்ளப்பயலுடைய படு மோசத்திலிருந்து என் தந்தையைக் காப்பாற்றவேண்டியது என் கடமை. இச்சொத்தை உன் கையில் சிக்கும்படிசெய்து கொண்டால் உனக்கு நல்ல கொள்ளையே. உதவாது உதவாது. என் தந்தை என்மேல் கோபிப்பதாயினும் சரி. நான் அவரை யிந்த அவமானத்தினின்றும் காப்பாற்றியே தீர்வேன்." என்றான்.

சிங்காரம் இவ்வாறு கூறும்போது லாயர் எழுந்து நின்று அவனை மிக்ககுரூரமான பார்வையாகப் பார்த்துக் கொண்டே யிருந்தான். இவன் மேல் எப்படியும் வஞ்சம் தீர்த்துக் கொள்வோம் என்று நம்பகமுடையவன் போல் நோக்கினான். கடைசியில் "ஓகோ! உன் தந்தைக்கு இன்னும் அதிக கௌரவம் கொண்டுவருவதற்காகத்தான் நீ யுன் தந்தையின் கொடிய விரோதியின் பேத்தியை மணம் புரிந்து கொண்டாய் போலும்" என்றான்.

இதைக் கேட்டதே சிங்காரத்தின் முகம் சவம் போல் வெளுத்து விட்டது. ஞானம்பாளும் அவள் தந்தையும் சம்பாஷித்துக்கொண்டிருந்த அங்கு சென்ற தம்புசாமிபிள்ளை வாயிற்படிக்கு வெளியில் நின்று உற்றுக் கேட்டுக் கொண்

டிருந்த சங்கதி சிங்காரத்திற்குத் தெரியாதாதலின் இவனுக்கெப்படி இந்த இரகசியம் தெரிந்ததென்று வியப் படைந்தான்.

பிரபுவோ மிக்க ஆத்திரத்தோடு லாயரை நோக்கி "என்ன ? என்ன கூறினை ? இது உண்மையல்லா விட் டால்..." என்றதே, லாயர் "பிரபுவே! நான் மிக்க விசனத் தோடு இவ்வுண்மையைக் கூறினேன். உமது புத்திரரையே கேளும்" என்றான். சிங்காரம் " தந்தையே ! என்னை மன் னிக்கவேண்டும். மன்னிக்கவேண்டும்." என்றான். "அவள் மிக்க யோக்கியமானவள்; தாங்கள் அவளைப்பார்த்தபின் இதைப்பற்றி முடிவு செய்யப் பிரார்த்திக்கிறேன் " என்று மிக்கவணக்கமாக வேண்டிக்கொண்டான்.

பிரபு முன்னமே வியாச்சியம் தமக்கு அனுகூலமாகா தென்ற எண்ணத்தால் மிக்க கோபங் கொண்டிருப்பதால் இதைக்கேட்டதே, "உதவாது ஒருகாலும் உதவாது..." என்றார். அதற்குள் சிங்காரம் "தந்தையே! ஆத்திரப்படா மல் சற்று பொறுமையாகச் சிந்தியுங்கள். இதனலிருக்கும் அனுகூலத்தையும் கவனியுங்கள். வியாஜ்ஜியம் நமக்கு அனு கூலமாகா விடினும் இந்த ஆஸ்தி முழுமையும் எப்படியும் நமது குடும்பத்திற்கே திரும்பி விடும். பராங்குசம்பிள்ளை கடைசியில் பேத்திக்கே தன் ஆஸ்தி முழுமையும் வைத்து விடுவார்," என்றான்.

பிரபு "நான் உன்னை மன்னிக்கவேமாட்டேன். இனி யுனக்கும் எனக்கும் ஒருசம்பந்தமும் இல்லை. நான் உன்னை அடியோடு நிராகரித்து விட்டேன்" என்று கோபத்தோடு கூறினார். சிங்காரம் எவ்வளவோ வேண்டிக்கொண்டும் பிரபு ஒரேபிடிவாதமாயிருந்தார். அந்தோ! கோபத்தை யதிகப் படுத்திக்கொண்டு மூச்சுத்தடுமாற்ற மடைந்து சிங்காரத்தை

நோக்கி "போ வெளியில்; இன்னும் இங்கு நிற்காதே" என்றார்.

சிங்காரம் அங்கு திருப்தியடைந்த முகத்தோடு நிற்கும் லாயரை நோக்கி "இத்துஷ்டனே இதற்குக் காரணம். நாம் இன்னும் இங்கிருந்தால் இவனுக்குக் கேலியாய்விடும்" என்றெண்ணி உடனே வெளியில் சென்றான்.

சற்றுநேரங் கழித்துப் பிரபு சற்று மனக்கொதிப் படங்கி லாயரை நோக்கி, "உனக்கு எவ்வளவு காலமாக இச் சங்கதி தெரியும்? ஏன் இது காறும் எனக்குக் கூறாமலே யிருந்தாய்?" என்றார்.

லாயர் "பிரபுவே! சற்று நேரத்துக்கு முன்பே இச் சங்கதி என் செவிகளில் விழுந்தது. அதைக் கூறவே நான் இப்போது இங்கு வந்தேன்" என்றான். பிரபு "எப்படித் தெரிந்தது?" என்றபோது, மச்சநாதம் பிரபு உண்ணாமலை யைப்பற்றித் தன் புத்திரியிடம் சம்பாஷித்துக் கொண்டிருந் ததையும் தான் வெளியிலிருந்து கேட்டதையும் கூறினான்.

பிரபு "சரி. கடைசியில் எனக்குத் தெரிந்துவிட்டது. இனி என் புத்திரனுக்கு ஒரு காசும் வைக்கமாட்டேன். நீ யுடனே நான் கூறுகிறபடி பத்திரம் எழுது" என்றார்.

லாயர்:—"மீதியிருப்பதை யாருக்கு வைக்கப்போகிறீர்கள்? நான் அறிந்தவரையில் ஒருவரையுங் காணோமே" என்றான்.

பிரபு:—ஒருவருமில்லை. வைத்தியசாலைக்கு, பாடசாலை முதலிய தருமத்திற்கு வைத்து விடுவேன். அவனுக் கொரு காசுகூட வைக்கமாட்டேன்.

லாயர்:—"இப்போது தங்களபிப்பிராயம் இன்னதென்று பூரணமாக அறிந்து கொண்டேன். ஒரு உத்தேசம்-யோசனை நினைக்கிறேன். மொத்தத்திற்கு என்னைத் தங்கள் காரியஸ்தனாக வைத்து விடுங்கள்" என்றான்.

பிரபு "யாராயினும் சரி. முன்னே பத்திரத்தை யெழுதி முடி" என்றார். அவ்வாறே "இரண்டொரு தருமங்களுக்கு வைத்ததுபோக மீதி முழுமைக்கும் என் நண்பனுகிய லாயர் தம்புசாமி பிள்ளையையே காரியஸ்தனுக நியமித்திருக்கிறேன்" என்று பத்திரம் எழுதிமுடிக்கப்பட்டது. பிரபு தடுமாற்றத்தோடு அதில் கையொப்பம் வைத்தார்.

இவ்வாறு நெடுநாள் நடக்கும் பெரிய வியாஜ்ஜியத்தில் தமக்குக் கொடியவிரோதியாகிய பராங்குசம்பிள்ளையின் லாயரைத்தன் ஆஸ்திக்குக் காரியஸ்தனுக ஏற்படுத்தியிருப்பதைச்சனங்களறிந்தால் பெரியசந்தேகங்கொள்வார்களென்றும் தான் பிரபுக்கு உளவாயிருந்தது யாவர்க்கும் தெரிந்து விடுமென்றும் தம்புசாமி பிள்ளை யுணர்வானெனினும் பொருளாசை யவனை யிழுக்கிறதாகையால் அதற்கேதாவது ஒரு தந்திரம் செய்யலாம் என்று தனக்குத் தானே சமாதானம் கூறிக்கொண்டான்.

இவ்வாறு துளசிங்கம்பிரபு அக்கிரமஸ்தனேடு சேர்ந்துகொண்டு அநீதமாகத் தன் புத்திரனுக்கு ஒரு காசும் வைக்காமல் எழுதிய மரண சாசனம் சரியாக எழுதி நிறைவேறிவிட்டது. பராங்குசம் பிள்ளை தன் பேத்திக்குத் தன் ஆஸ்தியை வைத்து நியாயத்தை நிலைநிறுத்த வெண்ணி உதார குணத்தோடு எழுதிய மரண சாசனம் கையெழுத்திடும் சமயம் தடைப்பட்டு அந்த வயோதிகர் பிராணபத்தான நிலைமையிலிருக்கிறார். காலக்கொடுமை! அக்கிரமச் செயல் இடையூறின்றி நிறைவேறியது. நியாயத்திற்கு இடையூறுண்டாயிற்று.

## 133-வது அத்தியாயம்.

### வியாஜ்ஜியம் பராங்குசம் பிள்ளைக்குச் சாதகமாதல்—வாதி பிரதிவாதிகளின் ஏககால முடிவு.

மேற்கண்ட சம்பவங்கள் நடந்த மூன்றாவது நாள் பகல் இரண்டு மணிக்கு நீதிச்சபையில் பெருங் கூட்டமான ஜனங்கள் குழுமி யிருக்கிறார்கள். பிரசித்தமான துளசிங்கம்பிரபு பராங்குசம்பிள்ளை இவர்களுடைய வியாச்சியம் முடிவிற்கு வரப்போகிறது. இப்போது இன்னொரு முறை வாயிதா போடப்படமாட்டாது என்று யாவரும் அறிவார்கள். ஆனால் இந்த வியாஜ்ஜியத்தில் சம்பந்தப்பட்ட வாதி பிரதிவாதிகள் இருவரும் மட்டும் நீதிச்சபைக்கு வரவில்லை. இருவரும் அவரவர்கள் வீட்டில் படுக்கையாய்ச் சந்தேகமான நிலைமையிலிருக்கிறார்கள். இருவர் பட்சத்து வக்கீல்கள் மட்டும் வந்திருக்கிறார்கள்.

தம்புசாமிப்பிள்ளை மட்டும் வந்து வக்கீல் உட்காருமிடத்தின் கோடியில் உட்கார்ந்திருக்கிறான். சிங்காரம்பிள்ளையும் வந்திருக்கிறான். கடைசியில் பிரதம நியாயாதிபதி தீர்ப்பளித்தார். வியாஜ்ஜியத்தின் சாராம்சங்களை யெல்லாம் கூறி முடிவில் வியாஜ்ஜியத்தில் சம்பந்தப்பட்ட சொத்துக்கள் முழுமையும் பராங்குசம் பிள்ளைக்கே உரித்தானவை யென்று ருசுவாவதால் துளசிங்கம் பிரபுவாகிய பிரதிவாதி பட்டியில் கண்ட விவரப்படி எல்லாச் சொத்துக்களையும் வாதியாகிய பராங்குசம் பிள்ளைக்கே ஒப்பித்து விடுவதோடு நேர்ந்த செலவையும் கொடுத்துவிட வேண்டுமென்று தீர்ப்பளித்து விட்டார்.

இதைக் கேட்ட நிமிடமே லாயர் தம்புசாமிப் பிள்ளை நியாயசபையை விட்டுப் புறப்பட்டுத் துரிதமாகச் சென்று ஒரு வண்டிபேசி ஏறிக்கொண்டு, துளசிங்கம் பிரபுவின்

மாளிகைக்குச் சென்றான். வேலைக்காரன் பிரபு விடம் சென்று லாயர் வந்திருப்பதைக் கூறியதும் பிரபு மிக்க ஆவலோடு அவரை உள்ளே விடும்படி கூறினார். மறு நிமிடம் லாயர் அதி துரிதமாகப் படிகளிலேறி வருவதை யுணர்ந்து சற்று சந்தோஷமடைந்து நிமிர்ந்து உட்கார்ந்தார். லாயர் எதிரில் வந்ததே பிரபு "என்ன அய்யா சங்கதி ?" என்றார். லாயர் "பிரபுவே! நாம்பயந்தமாதிரியே முடிந்ததற்காக மிக விசனிக்கிறேன்" என்றான். பிரபு "என்ன அய்யா! அதற்கு ஏன் இப்படி ஏதோ முழுகிப்போய் விட்டது போல் ஓடி வந்தாய். நீ வந்த வேகத்தை நோக்கி ஏதோ சந்தோஷ சமாசாரம் கொண்டு வந்தாய் என்றல்லவோ கருதினேன்" என்றார்.

லாயர் "பிரபு! அங்கு தீர்ப்புக்கூறப்பட்டதே, ஆலசியம் செய்யாமல் தங்களிடம் வந்து கூறுவதாகக் கூறினேன். அந்தப்படியே வந்தேன். இடையில் யாரேனும் திடீலென்று வந்து முரட்டுத்தனமாகக் கூறிவிடுவார்களென்று அஞ்சினேன்" என்றான். பிரபு அப்படியே ஆசனத்தில் சாய்ந்து விட்டார். "அடடா! போச்சு—யாவும் போய்விட்டது. பிச்சைக்காரனாகி விட்டேன். ஆ! என் எதிரி..." என்றார்.

லாயர்:—"பிரபுவே! அவ்விஷயத்தில் சற்று தேருதலே யிருக்கிறது. தங்கள் எதிரி இதன் பலனை யனுபவிக்கப் போகிறதில்லை" என்பதற்குள் பிரபு மிக்க ஆவலோடு, "ஆ! அவன் என்ன நிலைமையிலிருக்கிறான்? எனக்கு ஆறுதலுக்காகப் பொய் கூறாதே; உண்மையைக் கூறு. உண்மையை..." என்றார்.

லாயர்:—"பிரபு! நான் இரவு அவர்கள் வீட்டண்டை சென்று விசாரித்தேன். அக்கிழவன் அடியோடு ஸ்மரணையின்றி மரணத்தறுவாயி லிருக்கின்றான். தான் ஜயமடைந்த சங்கதியை யவன் அறிந்துகொள்ளும் நிலைமையிலில்லை.

அவன் ஸ்மரணை வராமலே இறந்து போவான் என்பது நிச்சயம். சந்தேகமில்லை” என்றான்.

பிரபு:—“ஆ! அவன் இதனாலுண்டாகும் சந்தோஷத்தை யனுபவிக்க மாட்டான். ஆ! எவ்வளவு செல்வம் தனக்கு வருகிறது என்பதை யறியமாட்டான். ஆ இது—இது—திருப்தியான சங்கதியே. அவன் பிழைக்க மாட்டான். பிழைக்கமாட்டான். ஸ்மரணையடைய மாட்டான்” என்றதும், அவர் முகத்தில ஒருவித மாறுதல் உண்டாயிற்று. “ஆ என்ன! இப்படி எங்கும் இருளாகி விட்டதே” என்றார். லாயர் உடனே மோசம் வந்துவிட்ட தென்றுணர்ந்து அருகிலிருந்த ஜலத்தை யெடுத்துக் குடிக்கும்படி செய்யப்பார்த்தான், முடிய வில்லை. உடனே வேலைக்காரரைக் கூப்பிட்டு “உங்கள் எஜமான் அபாயமான நிலையையடைந்தார். வயித்தி யரை யழையுங்கள்” என்றான். அச்சமயம் பிரபுவின் கண்கள் சுழலமிட்டன; பிராணன் நீங்கிவிட்டது.

லாயர்:—“ஆ! மிஞ்சிவிட்டது. வயித்தியரால் இனிப் பய னில்லை. திடீலென்று சம்பவித்த இந்த வியாச்சிய விஷயம் அவருக்குக் கெடுதியாய் முடிந்தது. ஒரு விஷ யத்திற்கு இது நலமே” என்றான்.

இதைக் கேட்ட வேலையாட்களில் பிரதானமான வீட் டுக் காரியஸ்தன் “அய்யோ கடவுளே! இது பெருந்துக்க மான சம்பவமே. ஆ! சிங்காரம் பிரபு உடனே வந்து யாவற் றையும் கைவசம் செய்துகொள்வாரல்லவா?” என்றான்.

தம்புசாமிப் பிள்ளை——“இல்லை யில்லை. சிங்காரம் பிள்ளைக் குப் பட்டம்மட்டுமே. சொத்தில் எள்ளளவு கூட அவ ருடையதல்ல. யாவற்றிற்கும் நானே காரியஸ்தனாக அமர்த்தப்பட் டிருக்கிறேன். இச்சங்கதியைச் சீக்கிரம்

இங்குள்ள வேலைக்காரர் யாவருக்கும் அறிவித்துவிடு" என்றான்.

அதைக்கேட்டுக் காரியஸ்தன் திடுக்கிட்டுப் பிரமை யடைந்து சென்றான்.

நீதிச்சபையிலிருந்து வீட்டிற்குத் திரும்பிய சிங்காரம் பிள்ளை நேராகச் சுந்தரம்மாள் வீட்டிற்குச் சென்றான். சுந்தரம்மாள் அவனைக் கண்டதே அவன் முகஜாடையால் சந்தோஷ சங்கதி கொண்டுவந்தானென்று உணர்ந்து "ஆ! அய்யா! தெரிந்துகொண்டேன்" என்றாள்.

சிங்காரம்பிள்ளை:—"ஆம். கடைசியில் நீதியே ஜெயமடைந்தது. சாந்தமும் சத்தியமுமே நிலைத்தன. அதிருக்கட்டும்; பெரியவர் எப்படி யிருக்கிறார்?" என்று ஆவலோடு கேட்டான்.

சுந்தரம்மாள்:—"ஆ! சுமாரே. இரவு பனிரண்டு மணி வரையில் ஒரு நம்பகமுமே யில்லை. கடைசியில் அந்த வேளைக்குத்தான் வைத்தியர் நம்பிக்கை யுண்டானதாகவும் இம்முறை விழிக்கும் போது நல்ல ஸ்மரணையோடு விழிப்பாரென்றும் கூறினர். மூச்சடைப்பும் முகத்திலிருந்த கோரமான மாறுதலும் நீங்கின. இப்போது சற்று நிம்மதியாகவே நித்திரை செய்கிறார். நான் போய் உண்ணாமுலையை யழைத்து வருகிறேன்" என்று கூறிவிட்டுச் சென்றாள்.

இரண்டொரு நிமிடங்களுக்குள் உண்ணாமுலை தன் கணவனிடம் வந்தாள். சிங்காரம் அவளை நோக்கி "என் அன்பே! நான் மிக்க சந்தோஷத்தோடு உனக்கு இச்சங்கதியைக் கொண்டுவந்திருக்கிறேன். உன் பாட்டனார் சுகமடைவாரென்றறிய மிகவும் சந்தோஷமடைகிறேன்" என்றான். உண்ணாமுலை "ஆ தங்கள் உதாரகுணம் யாவராலும் மெச்சத்தக்கது..." என்பதற்குள் அக்கன்னிகை "வாரும்! என்

பாட்டனிடம் சொல்லுவோம்; அவர் சீக்கிரம் விழித்துக் கொள்வார். ஆயினும் நாம் மிக்க ஜாக்கிரதையோடு இச் சந்தோஷசங்கதியை யவரிடம் கூறவேண்டும்; வாரும் செல் வோம்" என்றாள். உடனே இருவரும் சென்றார்கள்.

சிங்காரம் பிரபுவும் (இனி நாம் சிங்காரம் பிரபுவென்றே யழைக்கவேண்டும்) அவர் மனைவியாகிய உண்ணுமலையும் பராங்குசம் பிள்ளையிடம் சென்று அவர் அருகிலுட்கார்ந் தார்கள். இரண்டொரு நிமிடங்களில் அவர் கண் திறந்து பார்த்தார். உடனே தன் அருகிலிருப்பது யாரென்று தெரிந்து கொண்டார். தன் பேத்தியின் தோளைத் தட்டி, "ஆ என் கண்மணி!" என்றார். தன் பாட்டன் ஸ்மரணை யடைந்து தன்னை யறிந்து கொண்டதைப் பற்றி அவள் சந்தோஷ மடைந்தாள்.

கிழவர் "உண்ணு! அழாதே அழாதே; நான் மிக்க வியாதியுற்றிருந்தேன் என்று தெரிகிறது. ஆம் ஆம்; என் மனம் ஒரு சிந்தனையு மில்லாமலிருந்தது போல் காண்கிறது. அப்படித்தானே?" என்றார்.

உண்ணுமலை:—ஆம் ஆம்-மிக்க வியாதியோடிருந்தீர். இப் போது பேசாமல் நிம்மதியான மனதோடிரும். சீக்கி ரத்தில் நான் சுகப்படுத்திவிடுவேன். பாட்டனாரே! அன்று மாலை நாம் பேசிக்கொண் டிருந்தபோது தாங் கள் என் கணவனை யேற்றுக்கொள்வதாகக் கூறினீர் களே அது நினைவிருக்கிறதா?

அப்போதுதான் பராங்குசம்பிள்ளைக்குத் தாம் வியாதி யுற்றபின் இடையில் கொஞ்சம் காலம் கழிந்திருக்கிற தென்று தெரிந்தது. ஆனால் எவ்வளவு காலமென்று தெரியவில்லை. உடனே பளிச்சென்று அறிவு விளக்கம் உண்டாகியது. ஒருவித மனவெழுச்சியு முண்டாயிற்று. அவர் "ஆ! குழந்தாய் வியாஜ்ஜியம்! வியாஜ்ஜியம்! அது

[library stamp]

இம்முறைதானே முடிவிற்கு வரவேண்டும்?" என்று மிக்க ஆவலோடு கேட்டார்.

சிங்காரம் பிரபு:—"அய்யா! வியாஜ்ஜியம் முடிவிற்கு வந்துவிட்டது. ஆம். தாங்கள் மனத்துடிப்பிற்கு இடந்தரவேண்டாம். சாந்தமாகவேயிரும். வியாஜ்ஜியம் தங்களுக்கு அனுகூலமாக முடிந்ததற்காக நான் சந்தோஷங்கொண்டாடுகிறேன்" என்றான்.

இம்மொழிகளைக் கேட்ட வயோதிகர் அவன் கரங்களைப் பற்றிக்கொண்டு படுக்கையில் சாய்ந்துவிட்டார். பிறகு "நீ என் விரோதியின் புத்திரன்; நீயா என் ஜெயத்திற்குச் சந்தோஷப்படுகிறாய்?" என்று வியப்போடு கேட்டார். சிங்காரம் பிரபு "அய்யா! என்னைத் தங்கள் குடும்பத்தில் சேர்ந்தவனாக அங்கீகரிக்கப் பிரார்த்திக்கிறேன்; என் தந்தை என்னை நிராகரித்துவிட்டார். அடியோடு நிராகரித்துவிட்டார்" என்றான்.

பராங்குசம் பிள்ளை வியப்போடு "என்ன? உன் தந்தை யுன்னை நிராகரித்துவிட்டாரா! நிராகரித்தேவிட்டார்? என்?" என்றார்.

சிங்காரம்:—"ஆம்; நிராகரித்துவிட்டார். ஏனெனில் நான் தங்கள் பேத்தியை மணம்புரிந்தேன் என்பதற்காக" என்றான்.

உண்ணாமுலை:—"ஆகையால் பாட்டனாரே! தாங்கள் இவரை யேற்றுக்கொள்ள வேண்டும்" என்றாள்.

கிழவர்:—"ஆம் ஆம். நான் ஏற்றுக்கொள்கிறேன்" என்று மறுபடி அவன் கரங்களைப்பற்றிக் குலுக்கினார்.

அச்சமயம் மச்சநாதம் பிரபு அறைக்குள் வந்தார். அவர் அங்கிருந்த நிலைமையைக் கண்டு சந்தோஷமடைந்து "ஆ! விவகாரங்கள் நல்ல நிலைமைக்கு மாறி வருவதைக்

காண மிக்க சந்தோஷமடைகிறேன். உங்களுக்குள் அன்பு பரவியது” என்று கூறிவிட்டு,

கிழவரை நோக்கி “ நான் தங்களுக்காகச் சந்தோஷங் கொண்டாடலாமல்லவா ?” என்றார்.

உண்ணமுலை “ ஆகா ! வியாஜ்ஜியம் ஜெயமடைந்த சங்கதி அவருக்குத் தெரியும் ” என்றாள். பிரபு “ மிக்க சந்தோஷம்” என்றார். வயோதிகர் “கடைசியில் திரண்ட செல்வம் கிடைத்தது. ஆம். நான் இப்போது மிக்க செல்வவந்தனாய் விட்டேன். ஆ உண்ணமுலை ! சிறைச்சாலையிலுள்ளவர்களுக்கெல்லாம் விருந்தளிக்க வேண்டுமல்லவா ? மறந்துவிடாதே. நீயே சென்று அதை நடத்தவேண்டும். ஆ ! இவ்வளவு செல்வம்—நான் இத்தகைய சந்தோஷ சமாசாரத்தைக் கேட்டுச் சாந்தமாகவிருப்பது எனக்கே மிக்க ஆச்சரியமாக விருக்கிறது. ஆ ! இது என்ன உண்மையோ கனவோ ? மெய்தானே. அல்லது விழித்தபின் பொய்யாய் விடாதே” என்றார்.

பிரபு:—அய்யா! யாவும் உண்மையே. பொய்யுமல்ல கனவுமல்ல. நீர் எப்படி எண்ணியிருக்கிறீரோ அவ்விதமெல்லாம் யாவும் நிறைவேறும்படி உமது பேத்தி செய்வாள். நீர் இப்போது கிடைத்த திரண்ட செல்வத்தை வைத்துக்கொண்டு நெடுநாள் சுகத்தோடும் சந்தோஷத்தோடும் ஜீவித்துக்கொண்டிருக்க வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்கிறேன். ஆ! தாங்கள் ஒரு கடமையை நிறைவேற்றவேண்டி யிருக்கிறதல்லவா ? அதைப்பற்றி நினைப்பூட்டுகிறேன் ” என்றார்.

பராங்குசம்பிள்ளை “ஆ! ஆம் ஆம். என் ஆஸ்தி முழுமைக்கும் என் பேத்தி உண்ணமுலையையே சொந்தக்காரியாக்கி விடவேண்டும். ஆம். இப்போது என் மனம் நிம்மதி

யாக விருக்கிறது-மிக்க லேசாக விருக்கிறது. சீக்கிரம் பத்திரத்தை யெழுதிவிடும் கணபதிப்பிள்ளை யவாள்! எழுதி விடும்" என்றார்.

பிரபு:—"ஆகா; இதோ இரண்டு நிமிடங்களில் முடிக்கி றேன்" என்று கூறிவிட்டுப் பத்திரம் எழுதத் தொடங்கினர்.

அதற்குள் கிழவர் "ஆ இருளாய்விட்டதே. என் அய்யா? எப்படி எழுதுவீர்?" என்றார். அம்மொழிகளைக் கேட்டதே உண்ணாமுலை வீறிட்டலறினாள். அவள் தன் பாட்டனார் முகத்தை நோக்கியபோது அங்குண்டான பயங்கரமான மாறுதலைக் கண்டாள். மேலும் அப்போது பகல் இரண்டுமணி. பிரபுவும் பார்த்தார். ஓகோ! இதேதோ மோசம் நேருமோ வென்றஞ்சினர்.

அதற்குள் கிழவர் "ஆ! உண்ணாமுலை! என்ன இவ் வளவு இருட்டு! என் தீபம் ஏற்றவில்லை? ஓகோ! இதெல் லாம் பொய்; நான் இன்னும் சிறைச்சாலையில் இருட்டில் இருக்கிறேன்......" என்று அலறினர். உண்ணாமுலை முகத்திலறைந்து கொண்டு கண்ணீர் பெருக "தாத்தா! இல்லையில்லை. சிறைச்சாலையல்ல. உண்மையாய்க் கூறு கிறேன்; இதோ நாங்களெல்லா மிருக்கிறோம்" என்றாள்.

மச்சநாதம் பிரபு சிங்காரத்தை நோக்கி ஒரு வைத்தி யரை யழைத்துவர ஆளனுப்பும்படி கூறினர். அதற்குள் கிழவர் நெஞ்சில் குளகுளவென்று சத்தமுண்டாயிற்று- மரணம் நெருங்கிவிட்டதென்று பிரபு அறிந்து கொண்டு உண்ணாமுலைக்குத் தேறுதல் கூறினர். மறு நிமிடம் பாராங் குசம்பிள்ளை விண்ணுலகடைந்தார்.

உண்ணாமுலையின் துயரம் அளவு கடந்தது. ஆயினும் மச்சநாதம் பிரபுவும் சிங்காரம் பிரபுவும் அவளுக்குத் தேறு தல் கூறினர்கள். சுந்தராம்மாளும் மிக்க துயரமடைந்தாள்.

சற்று நேரங்கழித்து உண்ணுமுலை தன் கணவனை நோக்கி "இப்போது கிருஷ்ணராஜு எல்லாச் சொத்துக்கும் சுதந்தரக்காரனாக விருப்பதால் அவனுக்கு நாம் சங்கதியைத் தெரிவிக்கவேண்டுமல்லவா ?" என்றாள்.

சிங்காரம் "அதுவே நமது முதற்கடமை. முன்னே அவனுக்கு எவ்விதத்திலேனும் சங்கதியை யறிவிக்க வேண்டும். ஜனகபுரியிலிருக்கும் வர்த்தகராகிய பினாக பாணிப் பிள்ளையின் இவ்வூர்க் காரியஸ்தர்கள் யார் என்பது நமக்குத் தெரியும். எனக்கு அந்த இடமே தெரியும். கிருஷ்ணராஜும் அவன் மனைவியும் இப்போது எங்கிருந் தாலும் செலவுக்குப் பணம் அவர்களிடமிருந்துதான் வர வழைப்பார்கள். ஆகையால் அவர்கள் மூலமாகக் கிருஷ்ண ராஜின் வாசஸ்தலத்தை யறிந்துகொண்டு அவனுக்குச் சங்கதி தெரிவிக்கலாம்" என்றான்.

இவர்கள் பேசிக்கொண் டிருக்கும்போது ஒருவேலைக் காரி வந்து சிங்காரத்தை நோக்கி "தங்கள் மாளிகையி லிருந்து யாரோ ஆள் வந்து இருக்கிறான். தங்களை யுடனே பார்க்கவேண்டுமாம்" என்றாள். சிங்காரம் "ஆ. அப்படி யானால் அதென்னவென்று முன்னேபோய்ப் பார்த்துவிட்டு வருகிறேன்" என்று தன் மனைவியிடம் கூறிவிட்டுச் சென்றான்.

சிங்காரம் பிரபு சென்றதும் சுந்தரம்மாள் உண்ணு முலையை நோக்கி "அம்மா! கிருஷ்ணராஜு எல்லா ஆஸ்திக் கும் சொந்தக்காரனாகிவிடின் உனக்கு ஒருபாகம் கொடாமற் போகானென்றே கருதுகிறேன்" என்றாள்.

உண்ணுமுலை:—"அவன் மற்ற விஷயங்களில் எப்படியிருந் தாலும் என்னிடம் அவனுக்குள்ள அன்பு மட்டும் மாறாமலே யிருக்குமென்று தான் நம்புகிறேன். ஆனால், அவன் இனாமாகக் கொடுக்கும் சொத்தை என் கண

வர் ஏற்றுக்கொள்ளமாட்டாரென்று கருதுகிறேன்" என்றாள்.

சுந்தரம்மாள்:—"இவ்விஷயத்தில் அப்படி நினைக்கலாகாது. இப்போது அவனே யாவற்றிற்கும் சொந்தக்காரனாயினும் நியாயப்படி உன் பாட்டனார் மரண வேளையில் எண்ணிய எண்ணத்தை யவன் நிறைவேற்ற வேண்டியவன்." என்றாள். உண்ணாமுலை "ஆயினும் என்கணவன் ஒப்பமாட்டார். மேலும் கிருஷ்ணராஜு ஒரு காலத்தில் என்னை மணம்புரிய விரும்பினானென்பது அவருக்குத் தெரியும். அப்படி யிருக்க அவர் அவன் அளிக்கும் செல்வத்தை யுபயோகிப்பது கஷ்டம்" என்றாள்.

---

## 134-வது அத்தியாயம்.

### தந்தையின் கௌரவத்தைக் காப்பாற்றத் தநயனின் முயற்சி.

சிங்காரம்பிரபு திரும்பித் தன் மனைவியிடம் வந்ததும் "ஆ! இது மிக்க ஆச்சரியம்! ஒரே சமயத்தில் இரண்டு பேரும்" என்றதே, உண்ணாமுலை அவன் முகத்திலுள்ள விகாரத்தையும் துயரத்தையும் கண்டு "ஆ! தங்கள் தந்தைகூட இறந்து விட்டாரா? தங்களுக்கு ஆசீர்வாத மளிக்காமலே?" என்றாள்.

சிங்காரம் "ஆம். இப்போது நான் பிரபுவாய் விட்டேன். நீ சீமாட்டியாய் விட்டாய். அந்தோ! வெறும் பட்டங்கள்! வெறும் பட்டங்கள்!!" என்று கூறியதும் துயரத்தை யடக்க முடியாமல் தேம்பி யழுதான்.

அந்தோ! உத்தமகுணமுடைய புத்திரன் தன் தந்தையின் நடக்கை எவ்வளவு கொடுமையா யிருந்தாலும் தான்

செலுத்த வேண்டிய அன்பில் தவறமாட்டான் என்பதை நமது சிங்காரம் பிரபுவின் குணத்தால் நன்கறியலாகும். அதன் பிறகு அவன் தன் மனைவியை நோக்கி,

"என் தந்தை யெனக்கு ஒரு காசும் வைக்காமல் என்னை யடியோடு நிராகரித்து விட்டார். கொஞ்சம் சொத்தைத் தருமத்திற்கு வைத்துவிட்டு மற்ற மீதிமுழுமையும் அக்கள்ளப்பயலாகிய லாயர் தம்புசாமிப்பிள்ளையின் வசத்தில் விட்டுவிட்டிருக்கிறார்" என்றான்.

உண்ணுமுலை:—அந்தோ! இது மிக்க துக்ககரமான சமாசாரமே. அந்தோ! என்னை மணம்புரிந்து கொண்டதாலல்லவோ தங்களுக்கு இத்தகைய ஆபத்து நேர்ந்தது...

சிங்காரம்பிரபு:—நீ இப்படிக் கூறுவது தவறு. நான்றானே யுன்னை வலியவந்து மணம் புரிந்துகொண்டேன். நீயாக என்னை மணம் புரிய விரும்பினால் இப்போது என்னால் உனக்குத் துயர முண்டாகியதென்று கூறலாம். இது கிடக்கட்டும். இனியிப்படிக் கூறாதே. இப்போது இக்கள்ளப்பயல் தம்புசாமி என் தந்தையின் கடன்காரர்களுக்குச் சேரவேண்டிய தொகையை யளிக்காமல் மோசம் செய்து விடுவான். அதனால் என்தந்தையின் பெயருக்கு மிக்க அகௌரவமுண்டாகும். நான் இதைப்போய் உடனே தடுக்கவேண்டும்.

இம்மொழியைக் கேட்டதே உண்ணுமுலை தன் கணவன் தம்புசாமிபிள்ளையிடம் போய் ஏதேனும் சச்சரவு நேர்ந்தால் இவனுக்கென்ன கெடுதி நேருமோ வென்று மிக்க திகிலடைந்தாள். சிங்காரம்பிரபு " நீ யொன்றுக்கும் பயப்பட வேண்டாம். என் தந்தை யெனக்கு ஒரு காசும் வைக்காமல் அநீதமாய் இத்துஷ்டனிடமே யாவும் ஒப்பித்து விட்டாலும், அவர் பெயருக்கு அகௌரவம் நேராமல் காக்க வேண்டியது என் கடமை. நான் போய்ச் சீக்கிரம் வந்துவிடுவேன்.

நான் அப்படி இககட்டில் சிக்கிக் கொள்ளமாட்டேன்" என்று கூறிவிட்டு அங்கிருந்து வெளிப்பட்டான்.

சிங்காரம்பிரபு தன் தந்தையின் மாளிகைக்குச் சென்றதும் வாயில்காப்போனிடம் தம்புசாமிப் பிள்ளை யுள்ளேயிருக்கிருனென்று கேட்டான். அவன் ஆம் என்றான். உடனே அங்கிருந்த வேலையாட்கள் மிக்க பரிதாபத்தோடு "எஜமானே! குறைந்தது தங்கள் பிறப்புரிமைக்குரிய சொத்தாவது தங்களுக்குக் கிடைக்குமல்லவோ?" என்று அவனைக் கேட்டார்கள்.

சிங்காரம்பிரபு:—எனக்குச் சேர வேண்டியதைப் பற்றி எனக்கு அக்கரையில்லை. என் தந்தையின் கடன்காரர்களுக்குச் சேரவேண்டிய தொகைகள் சரியாய்க் கொடுக்கப்படவேண்டும். அவர்கள் மோசம் செய்யப்படலாகாது." என்றான்.

போஜன அறையிலிருந்து இம் மொழிகளைக் கேட்டுக் கொண்டிருந்த தம்புசாமிப்பிள்ளை வெளியில்வந்து சிங்காரம் பிரபுவை நோக்கி "என்ன பிரபுவே! மோசம் என்கிற வார்த்தை யாருக்காகக் கூறினீர். எனக்கும் என் தொழிலுக்கும் அகௌரவமான வார்த்தையாக வெண்ணியா கூறினீர்?" என்றார்.

சிங்காரம்பிரபு:—அய்யா! நாமிருவரும் தனியே பேசினல் நலம்.

லாயர்:—ஆகா தடையின்றி.

உடனே இருவரும் அறைக்குட் சென்றதும் சிங்காரம் பிரபு லாயரை நோக்கி, "அய்யா! என் தந்தை யொரு மரணசாசனம் எழுதிவைத்திருப்பதாகவும் அதில் என் தந்தையின் வேலைக்காரர்களில் இருவர் சாட்சிகளாகக் கையொப்பம் வைத்திருப்பதாகவும் அறிகிறேன்." என்றான்.

லாயர்:—ஆம். ஒரு மரணசாசனம் இருக்கிறது. அது முறைமைப்படி வெளிவரும்.

சிங்:—அம்மரணசாசனத்தின்படி நீர்...

லாயர்:—அச்சாசனத்திலுள்ள நிபந்தனைகளைக் கூறுகிறேன். அதன்படி மீதியிருக்கும் சொத்தில் மூன்றில் ஒரு பாகம் தருமத்திற்கும் மற்ற இரண்டு பாகங்களும் அவருடைய மெய்யன்பனுகிய எனக்கும் அளிக்கப் பட்டன.

சிங்:—நீர் என் தந்தையின் ஆஸ்தியை யடைவதாயின் அவர் கடன்களைக் கொடுத்துத் தீர்க்கவேண்டு மென் பதை யறிவீரல்லவா ?

லாயர்:—அவ் விஷயத்தைப் பற்றித் தாங்கள் கவலைப்பட வேண்டாம். தங்கள் தந்தையின் கடன்கள் பைசல் செய்யப்பட்டன.

சிங்காரம்பிரபு வியப்போடு "என்ன ? பைசல் செய்யப் பட்டனவா ? யார் பைசல் செய்தது ?" என்றான்.

லாயர்:—யார் கொடுப்பார்கள் ? நான்றான். தாங்கள் சென்று கடன்காரரை யெல்லாம் விசாரிக்கச் சிரமம் எடுத்துக்கொள்ள வேண்டாம். நான் நடந்த சங்கதி யைக் கூறுகிறேன்.

சிங்:—கூறும் பார்ப்போம்.

லாயர்.—தங்கள் தந்தைக் கிருந்த மற்ற கடன்களோடு வக்கீல்களுக்குப் பெருந்தொகை கொடுக்கவேண்டி யிருந்தது. வியாச்சியம் தோற்று விடுமென்றும் அவ ருக்கு மிச்சமொன்று மிராதென்றும் அவர்க ளறிவார் கள். நான் அவர்களிடம் சென்று பிரபுவுக்கு ஒரு சொத்துமில்லை, உங்களுக்கு ஒரு காசுகூடக் கிடைக் காது என்று கூறியதே யவர்கள் திகிலடைந்தார்கள். அதன்மேல் நான் ஒருவாறு பேரம்செய்து கொஞ்சத்

திற்குக் கொஞ்சம் கொடுப்பதாக அக் கடன்களை யேற்றுக்கொண்டு அவர்களுக்கு ஒரு தொகை கொடுத்து விட்டேன். எவ்வளவென்பதைப்பற்றி அவசியமில்லை" என்றான்.

சிங்:—அப்படியல்ல. அதைப்பற்றி மிக்க அவசிய மிருக்கிறது. இருக்கட்டும்; அதைப்பற்றிப் பிறகு பேசிக் கொள்வோம். மற்ற கடன்காரர்களுக்கும் அவ்வாறே செய்திரோ ?

லாயர்:—ஆம். அவருடைய வக்கீல்களே சந்தர்ப்பத்தை யறிந்து அப்படி யொத்துக் கொண்டார்கள் என்பதை யறிந்ததே மற்ற கடன்காரர்களும் நூற்றுக்கு இவ்வளவென்று பெற்றுக்கொண்டார்கள்.

சிங்:—அவர்கள் அகப்பட்டது போதும் என்று ஒப்புக் கொண்டிருக்கலாம். ஆனால் நீர் என் தந்தை ஒரு காசுக்கும் கதியில்லாதவர் என்று கூறியது பெரு மோசம். அது பெரும்பொய்யல்லவா. நீங்கள் இருவரும் அன்று பேசிக்கொண்டிருந்தபோது நான் யாவும் கேட்டேன். என் தந்தையே தன் கடன்காரருக்கெல்லாம் கடன்களைப் பூராவாகக் கொடுத்துவிடக்கூடிய சொத்து தமக்கிருக்கிறதென்று உம்மிடம் கூறியிருக்கிறார்.

லாயர்:—"நீர் கேட்டதற்கு எவ்வளவு சமாதானம் கூறவேண்டிய தவசியமோ அவ்வளவு கூறினேன். அதற்குமேல் பேசத் தங்களுக்குப் பாத்தியமில்லை. நான் விவகாரப்படி கடன்களைப் பைசல் செய்து விட்டேன். எப்படியோ ஒருவழியாய் அவர்கள் திருப்தி யடையச் செய்துவிட்டேன்" என்றான். சிங்காரம் ஆத்திரத்தோடு "அய்யா! நீர் கடன்காரரை யேமாற்றி மோசம்

செய்து விட்டீர். அவர்களுடைய கடன்கள் முழுமையும் கொடுக்கப்படவேண்டும்" என்றான்.

லாயர்:—"அது தங்கள் அபிப்பிராயம். என் அபிப்பிராயம் அவ்வாறில்லை. இப்போது நீர் இருப்பது உமது வீடல்ல" என்றான்.

சிங்காரம்பிரபு "அது எனக்குத் தெரியும்" என்று கடைசியாக எல்லா அறைகளையும் ஒருமுறை பார்த்துவிட்டு "நான் செல்கிறேன்" என்று கூறிவிட்டுத் தன் தந்தையின் சவம் இருக்கும் அறைக்குள் சென்று சற்றுநேரம் அங்கிருந்து பிறகு வெளிவந்தான். அப்போது வேலைக்காரரில் பிரதானமானவர்கள் அவனைக் கண்டு அவன் விஷயமாகத் தங்கள் துயரை வெளியிட்டார்கள்.

சிங்காரம் அவர்களுக்குத் தக்க மொழிகளைக் கூறி "நண்பர்களே! என்வரையில் தரித்திரனாகி விடுவதற்காக நான் விசனிக்கவில்லை. ஆனால் என் தந்தையின் கௌரவம் கெடாமல் அவருடைய கடன்க ளெல்லாம் பூரணமாகக் கொடுக்கப்படவேண்டும்" என்று கூறிக்கொண்டே தம்புசாமிப் பிள்ளை யுட்கார்ந்திருக்கும் அறையருகில் வரும்போது அவனுக்குக் கேட்குமாறு "இவ்விவகாரம் இப்படியே நின்றுவிடலாகாது. இதைப்பற்றிப் பூரண ஆராய்ச்சி செய்தே தீருவேன்" என்றான்.

லாயர் "பிரபுவே! ஒரு வார்த்தை. முன்னமே கூற மறந்து விட்டேன்" என்றான்.

சிங்காரம்பிரபு:—என்ன சங்கதி? கூறும் கேட்போம்" என்றான்.

லாயர்:—நான் தங்கள் பயமுறுத்தலுக்கு அஞ்சமாட்டேனென்று தங்களுக்குத்தெரியும். ஆயினும் தங்கள் விஷயத்தில் கடுமையாய் நடந்துகொள்ள எனக்கு விருப்பம் இல்லை. நீர் உமது தந்தைக்குக் கோபமூட்டி

விட்டீர். அவர் ஆஸ்தியை யவர் இஷ்டப்படி செய்ய அவருக்கு அதிகார மிருக்கிறது. ஆகையால் தாங்கள் என்மேலாவது மற்றவர்கள் மேலாவது கோபம் கொள்ளலாகாது." என்றான்.

சிங்காரம்பிரபு:—அய்யா! எல்லாவிஷயமும் எனக்குத் தெரியும். நீர் என் தந்தையின் எதிரியாகிய பராங்கு சம்பிள்ளைக்கு வக்கிலாக விருந்தவர். உமக்கு என் தந்தை இந்த ஆஸ்தியை வைக்கவேண்டிய காரணம் என்ன? நீ உன் கட்சிக் காரனுக்குப் பெருந் துரோகம் செய்தாய். நீ செய்த படுமோசமே அந்த வயோதி கரைப் பாபம்! இத்தனை வருடங்களாகச் சிறையி லிருக்கச்செய்தது. அந்தோ! அவருக்கு நீ செய்த அக் கிரமம் கடவுளுக்குப் பொறுக்குமா? அவரிடம் பணம் வாங்கிக் கொண்டு அவருக்கே சதிசெய்தாய். அதோடு என் தந்தைக்கு இவ்வளவு காலமாய் உளவாக விருந்தா யென்பது இப்போது நன்றாக வெளியாய் விட்டது. அவரிடம் என் இரகசியத்தைக் கூறி என் மேல் வெறுப் புண்டாகும்படி செய்து, கடன்காரரை மோசம் செய்து...ஆகா! உன் மோசச் செயல்களை யெண்ண வெண்ண உன்னைச் சும்மாவிட..." என்று கூறிக் கோபத்தால் அதற்குமேல் கூற முடியாமல் நின்றான்.

தம்புசாமிப்பிள்ளை:---"எனக்கு நீ கோபமூட்டாமலிருந்தால் நீ ஜீவனம் செய்வதற்காக ஒரு ஆயிரம் பவுனுக்கு உண்டி யெழுதிக்கொடுக்க விருந்தேன்" என்றான்.

இதைக் கேட்டதே சிங்காரம் பிரபுவுக்கு மிகக் கோப முண்டாய் விட்டது. அவன் கண்கள் சிவப்பேறி மிக்க கோபாவேசத்தோடு "சண்டாளத் துரோகியே! மோசக் காரக் கள்ளப்பயலே! எனக்கா இலஞ்சம் கொடுத்து

அடக்கிவிடப் பார்க்கிருய்? நான் இதையாராய்ந்தே தீரு வேன்" என்ருன்.

லாயர்:—ஆ! இத்தூஷணிக்கு எப்படியாவது வஞ்சந் தீர்த்துக்கொள்ள வழிதேடுவேன்.

சிங்காரம் பிரபு:—"நீயா! சே! பழிக்குப்பழி கடவுளே உன்மேல் போடப்போகிருர். நீ யொருபோதும் தப்பமாட்டாய். உன் போன்ற சண்டாளன் இருக்கும் இடத்தில் கூட இருப்பது பாபம்" என்று கூறிக் கொண்டே அங்கிருந்து வெளிப்பட்டான்.

அவ்வாறு அங்கிருந்து புறப்பட்டுத் தன் மனைவி யிருக்கும் வீட்டிற்குச் சென்று தனக்கும் தம்புசாமிப்பிள்ளைக்கும் நடந்த சம்பாஷணையைக் கூறினன். உண்ணுமுலை "அவன் அக்கிரமஸ்தன் என்பதில் சந்தேகமேயில்லை. இப்போது அவன் தங்கள் மேல் தங்கள் தந்தைக்கு வெறுப்புண்டாகும்படி செய்துவிட்டுத் தங்களுக்குச் சேரவேண்டிய சொத்தைத் தானடைந்தான். இதில் அவன் செய்த மோசம் இன்னதென்று எனக்கு விவரமாக விளங்கவில்லை" என்ருள்.

சிங்காரம் பிள்ளை:—"என் தந்தையிடம் ரொக்கம் பத்தாயி பவுன் ஒரு அன்னியநாட்டுப் பாங்கியிலிருந்தது. அதன்றி பூஸ்திதி சாமான்கள் முதலிய யாவும் பதினைந்தாயிரம் பெறும். ஆகமொத்தம் இருபத்தைந் தாயிரம் பவுன் இருக்கிறது. இதில் மூன்றில் ஒரு பாகமாகிய எண்ணுயிரம் தருமத்திற் களிக்கப்பட்டால் பதினேழாயிரம் இருக்கிறது. வக்கீல்களுக்கும் மற்ற கடன்காரருக்கும் கொடுக்கவேண்டிய தொகை யவ்வளவிருக்கும். இந்தத் தம்புசாமி கடன்காரர்களிடம் சென்று என் தந்தையிடம் ஒரு காசுகூட இல்லையென்றும் அவர்கள் கிடைக்கக்கூடிய தொகை

யைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் பொய்கூறி அவர்களுக்கு இரண்டாயிரம் பவுன் கொடுத்துவிட்டு மற்றதை யிவன் எடுத்துக்கொண்டிருக்கிறான். அவ்வாறு எடுத்துக்கொண்டு இவன் அனுமத்தாகப் பதினைந்தாயிரம் பவுன் அபகரிக்கிறான். இதென்ன படு மோசம்! இதை நான் சும்மா விட்டுவிடமாட்டேன். எனக்கு மிக்க சினேகாகிய ஒரு வக்கீலிடம் இதைப் பற்றி ஆலோசனை செய்கிறேன்" என்றான்.

அச்சமயம் சுந்தரம்மாள் அங்கு வந்து சிங்காரம் பிள்ளையை நோக்கி "முன்பு தங்களிடம் வந்து பேசிய அதே வேலைக்காரன் மறுபடி வந்திருக்கிறான். தங்களிடம் என்னமோ பேசவேண்டுமென்று கூறுகிறான்" என்றாள். சிங்காரம் பிரபு "ஆ நமது அந்தரங்க ஆளான நாராயணன்! அவனைக்கண்டு பேசவேண்டும்" என்று கூறிவிட்டு எழுந்து போய் அவனைக்கண்டான்.

நாராயணன் "பிரபுவே! நான் தங்களிடம் ஒரு சமாசாரம் கூறவேண்டும். இன்றேல் என் மனம் நிம்மதியடையாது போல் தெரிகிறது. வரவர என் மனதில் ஒரு விவகாரம் புதிதாக விளங்குகிறது. இந்த லாயர் தம்புசாமிப்பிள்ளை அங்கு செய்யும் விவகாரங்களும் அவன் நடவடிக்கைகளும் எனக்குப் பிடிக்கவில்லை. அதைப்பற்றி மிக்க ஆலோசனை செய்தேன்-அவை ஒன்றோடொன்று சேர்ந்து என் மனதில் ஒரு சிந்தனையை நிலையாக வுண்டாக்கிவிட்டன" என்றான்.

சிங்காரம் பிரபு:—"நாராயணா! நீ என் குடும்பத்தில் நெடு நாளிருந்தவன். நீ என் விஷயத்தில் அன்புள்ளவன் என்பது எனக்குத் தெரியும். ஆகையால் நீ செய்யும் உதவிக்காக நான் உனக்கு நல்ல பரிசளிக்க மறக்க மாட்டேன்" என்றான்.

நாராயணன்:—"பிரபுவே! நான் இப்போது பரிசுக்காக எதிர்

பார்த்து இச்சமாசாரத்தைத் தங்களிடம் கூற வெண்ணி வரவில்லை—இல்லை உண்மையாகவே யில்லை. எனக்கு அத்தம்புசாமிப் பிள்ளையின் மேல் வெறுப் புண்டாய் விட்டது. முன்னமே என் மனதில் ஒரு விஷயம் இருந்தது. ஆயினும் அதைப்பற்றி நான் அப்போது அவ்வளவாய்க் கவனிக்கவில்லை. ஆனால் இப்போது அது என் மனதில் உறுத்துகிறது. அதெப்படியாயினு மிருக்கட்டும். ஒரு மனிதன் மேல் நமக்கு ஒரு விஷயத்தில் சந்தேகமுண்டானால், அவனைப்பற்றிய மற்ற விஷயங்களில் உண்டாகும் சந்தேகம் முதல் எண்ணத்தைத் திடப்படுத்துகிறது" என்றான்.

சிங்காரம் பிரபு:—"இந்தத் தம்புசாமிப்பிள்ளை மிக்க அக்கிரமஸ்தனென்று எனக்கு முன்னமே நன்றாகத் தெரியும். இவன் எத்தகைய பாதகத்தையும் செய்ய அஞ்சமாட்டான். இப்போது நீ இவன் விஷயமாகக் கேள்விப்பட்ட சமாசாரம் என்ன? உன் மனதில் எந்தச் சங்கதி யுதிக்கிறதென்று இப்போது நீ கூறினாய்?" என்றான்.

அதன் மேல் அவ்வேலைக்காரன் ஒரு சமாசாரத்தைப் பற்றிக் கூறினான். சிங்காரம் பிரபு அதைக் கவனமாகக் கேட்டுக்கொண்டான். சற்று நேரம் ஆழ்ந்த சிந்தனையி லிருந்தான். பிறகு நாராயணனை நோக்கி "ஆ! இது மிக்க விபரீதமான விஷயம். நாம் ஏககாலத்தில் நம்பிக் கொள்ளத் தக்கதல்ல. ஒரு சமயம் நீ முதலில் நினைத்தபடி அப்போது நேர்ந்த சந்தர்ப்பங்களால் அவ்வாறு புலப்பட்டிருக்கும். பிறகு நீ அவன் நடக்கைகளை யதிகமாக அறிந்தபடியால் இப்போது அது உண்மையென்று உனக்குப் புலப்படலாகும். ஆயினும் இதைப்பற்றி யொருவரிடமும் கூறவேண்

டாம். எனக்கு மெய்யான சினேகர் ஒருவருளர். அவரிடம் இதைப்பற்றி ஆலோசித்துக் கூறுகிறேன்" என்முன்.

அதன் பிறகு வேலைக்காரன் விடை பெற்றுச் சென்முன். சிங்காரம் பிரபு தன் மனைவியிடம் திரும்பி வந்து வேலைக்காரன் கூறிய உண்மைச் சங்கதியை மறைத்து வேறு ஏதோ ஒரு சங்கதியைக் கூறிவிட்டான். ஏனெனில் அச்சங்கதியைப்பற்றித் தீரவிசாரித்தபின்பே தன் மனைவியிடம் அதை வெளியிடவேண்டு மென்பது அவன் கருத்து.

அடுத்தநாள் பகல் உச்சிவேளைக்கு மச்சநாதம் பிரபு தன் புத்திரியாகிய ஞானம்பாள் வீட்டிற்குச் சென்று அவளையும் கிருஷ்ணபாயையும் கண்டார். பராங்குசம் பிள்ளை யிறந்து போன சங்கதியையும் துளசிங்கம் பிரபு இறந்து போன சங்கதியையும் பற்றி யவர்களிடம் கூறும்போது, உலகில் மனிதனுடைய வாழ்க்கை நிலையில்லாத தென்றும், எண்ணிய எண்ணத்தை யொருவன் நிறைவேற்றிக்கொள்ள முடியாதென்றும், அதையறிந்திருந்தும் மனிதர் விளக்கைக் காத்திலேந்திக்கொண்டு கிணற்றில் வீழ்பவர் போல் ஒருவருக் கொருவர் பொருமை கொள்ளுதலும், பேராசை கொண்டு ஒருவர் சொத்தை யொருவர் அபகரிப்பதும், ஒருவரை யொருவர் கெடுக்க முயல்வதும் அறிவீனமென்றும் கூறினர்.

அதன்பிறகு அங்கிருந்த சித்திரப் படங்களைப் பார்வையிட்டார். அங்கு ஞானம்பாளும் கிருஷ்ணபாயும் எழுதிய சித்திரப் படங்கள் பல விருந்தன. பிரபு அவற்றை யொவ்வொன்றகப் பார்த்து அவர்கள் இருவரும் சித்திரமெழுதும் திறமையைப் பற்றி உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தார். அப்படங்களில் ஒன்று ஞானம்பாள் தன் தாயின் புகைப்படத்தைப் பார்த்துத் தீட்டிய சித்திரப்

படம். அதைப் பார்த்தபோது பிரபுவின் மனதில் பலவித உணர்ச்சிகள் உண்டாயின. கண்களில் நீர்ததும்பியது.

அதன் பின் அங்கிருந்த இன்னொரு படத்தை யெடுத்து "ஆ! இது நல்ல அழகிய உருவம்..." என்றதே ஞானும்பாள் "இது லாயர் தம்புசாமிப்பிள்ளையின் சகோதரர் புதல்வியாகிய நீலாட்சியின் படம்" என்றாள். பிரபு "ஆ! இக்கன்னிகை கனம் அச்சுதம் பிள்ளையை யல்லவா மணம் செய்துகொண் டிருக்கிறாள்?" என்றார்.

ஞானும்பாள் ஆம் என்றாள். பிரபு "அவள் ஒரு செல்வப்பிரபுவின் மகனை யெவ்வாறு மணம் புரிந்து கொண்டாள் என்பது எனக்கு விளங்கவில்லை" என்றார். ஞானும்பாள் "அவள் அந்த அச்சுதம்பிள்ளையோடு மலை நாட்டிற்கு ஓடிவிட்டாள். அவர்கள் அங்கிருந்து திரும்பிவந்தபோது மனைவியும் புருடனுமாக வந்தார்கள்" என்றாள். பிரபு "ஆ! அந்நாட்டில் இருவரும் கணவன் மனைவியென்று பகிரங்கமாகக் கூறிக்கொண் டிருப்பார்கள். அவ்வளவே அந்நாட்டுச் சட்டப்படி அதற்குப் போதுமான அத்தாட்சி" என்றார்.

ஞானும்பாள் "இருக்கலாம். இங்கு வந்தபின் பகிரங்கமாகத் திருமணம் நடந்தது. அவள் பெரிய தந்தை அவளுக்கு முப்பதினாயிரம் பவுன் சீதனமாக அளித்தார்" என்றாள்.

பிரபு மிக்க வியப்போடு "இதுவே எனக்கு மிக்க வியப்பை யளிக்கிறது. பணப் பேய் பிடித்த அந்த அக்கிரமஸ்தன் முப்பதினாயிரம் பவுன் கொடுப்பதென்றால் அவன் மனப்பூர்வமாக அப்படிச் செய்தே யிருக்கமாட்டான். எதற்காகவோ பயமுறுத்தப்பட் டிருக்கவேண்டும்" என்றார்.

ஞானும்பாள் "நீலாட்சிக்கு என்ன காரணத்தாலோ தம்புசாமிப்பிள்ளை மேல் ஒருவித அதிகாரம் செலுத்த வழி

யிருக்கிறது. தங்களிடம் சிக்கிய அப்பத்திரம்—உண்ணு முலையின் பாட்டனுருடைய விடுதலைக்கு அவ்வளவு முக்கிய மான அப்பத்திரம் அவளால் தான் வாங்கிவரப்பட்டது" என்றுள். பிரபு "ஆ! அப்பத்திரத்தால் எவ்வளவு சம்ப வங்கள் நேர்ந்தன. அச்சண்டாளன் எதிரியாகிய துளசிங் கம் பிரபுவுக்கு உள்ளுக்குள் உளவாயிருந்து கொண்டு நல்ல பணம் சம்பாதிப்பதற்கு அப்பத்திரம் ஆதாரவாக விருந்தது. அதுவே அக்கிழவரை யவ்வளவு காலம் சிறையிலிருக்கச் செய்யவும் ஆதாரமாகவிருந்தது. அத்தகைய பத்திரத்தைக் கொடுத்துவிடச் செய்ததும், நீலாட்சிக்கு முப்பதினுயிரம் பவுன் அளிக்கச் செய்ததுமான இரகசிய ஆயுதம் நீலாட்சி யிடம் சிக்கியிருக்கிறதென்பது உண்மை. அது எப்படிப் பட்டதாக விருக்கவேண்டுமென்பதே எனக்கு வியப்பாக விருக்கிறது" என்றுர்.

ஞானம்பாள் "அப்பா! தன் பெரியப்பன் எத்தகைய விஷயத்திற்கும் தனக்கு மறுத்துக் கூறமாட்டாரென்று நீலாட்சி கூறுகிறுள்" என்றுள்.

பிரபு:—"ஆ. சரிதான். இருக்கலாம். அப்படிப்பட்ட பயங் கரமான ஆயுதம் அவள் கரத்தில் சிக்கியிருக்கிறது" என்றுர்.

அச்சமயம் இராஜாம்பாள் என்ற வேலைக்காரி அங்கு வந்து பிரபுவை நோக்கி "சிங்காரம் பிரபு வந்திருக்கிறுர். தங்களைக்கண்டு பேசவேண்டுமாம்" என்றுள்.

பிரபு உடனே யெழுந்து சிங்காரம் பிரபு வந்திருக்கும் அறைக்குச் சென்றுர். ஒருவருக்கொருவர் வந்தனுேப சாரங்கள் நடந்தபின் சிங்காரம் பிரபு "பிரபுவே! என் தந்தை யிறந்துபோன சங்கதி கேள்விப்பட்டீர்களோ?" வென்றுன். பிரபு "ஆகா நேற்றுக் கேள்விப்பட்டேன். நெடுநாள் நடந்த வியாஜ்ஜியம் முடிவிற்கு வந்ததினமே

அதில் வாதி பிரதிவாதிகளாக விருந்த விருவரும் மடிந்து போனது மிக்க வியப்பே! மற்றையருக்கு இது ஓர் புத்தி மதியைக் கற்பிக்கின்றது" என்றார்.

அதன் பிறகு சிங்காரம்பிள்ளை தனக்கும் லாயர் தம்பு சாமிப்பிள்ளைக்கும் நடந்த சம்பாஷணை முழுமையும் மற்ற விஷயங்களையும் விவரமாகக் கூறினான். பிரபு யாவும் கேட்ட பின் கோபத்தோடு "அச்சண்டாளன், கள்ளப்பயல் என்பது எனக்கு இருபது வருடமாகத் தெரியுமே. அடடா! அவன் எத்தகைய அக்கிரமத்திற்கும் அஞ்சுகிறவனல்லவே. பணத்திற்கு எதையும் செய்வான்! எதையும் செய்வான்!! ஆயினும் இப்போது நீ கூறவேண்டுவது இன்னும் ஏதோ விருக்கிறதென்று எனக்குப் புலப்படுகின்றது" என்றார்.

அதன் பிறகு சிங்காரம் பிரபு தன் வேலைக்காரனாகிய நாராயணன் தன்னிடம் கூறிய மர்மமான சங்கதியைப்பற்றிக் கூறினான். பிரபு சாவதானமாகக் கவனத்தோடு யாவும் கேட்டதும் "ஆகா! இது மிக்க விபரீதமான சங்கதி-ஆனால் மிக்க முக்கியமான சங்கதி" என்றார்.

அதன் பிறகு இருவரும் அதைப்பற்றிச் சற்றுநேரம் பேசினார்கள். முடிவில் பிரபு, சிங்காரம் பிரபுவை நோக்கி "நண்பனே! இது மிக்க ஜாக்கிரதையாக நடத்தப்பட வேண்டிய விஷயம். நாமிருவரும் இருபத்து நான்கு மணி நேரம் தனித்தனியாக இதைப்பற்றி ஆலோசனை செய்வோம். நாளை யிதே வேளைக்கு நீ நான் தங்கியிருக்கும் ஹோட்டலுக்கு வா. அங்கே கணபதிப்பிள்ளையைக் காண வேண்டுமென்று கேள். அப்பெயர்தான் எனக்கு அங்கே. அப்போது நம்மிருவர் ஆலோசனையிலும் ஏற்பட்ட விஷயங்களைப்பற்றிக் கலந்துபேசி இதை யெப்படி நடத்துவதென்று ஒரு முடிவிற்கு வாலாம்" என்றார். அதன்மேல் சிங்காரம் பிரபு விடைபெற்றுச் சென்றான்.

அன்றுமாலை தெய்வசங்கல்பமாகப் பிரபுவிடம், அவர்கள் சிந்தனையிலிருக்கும் பெரிய மர்ம சங்கதியைப்பற்றிய முக்கியமான சில அத்தாட்சிகள் கிடைத்தன. அதனால் மறுநாள் அவரும் சிங்காரம் பிரபுவும் ஹோட்டலில் சந்தித்த போது அவர்கள் விஷயம் கஷ்டமில்லாமல் சுலபமாகவே ஒரு தீர்மானத்திற்கு வந்துவிட்டது. அதன்பிறகு இரண்டு மூன்று தினங்கள் அவர்கள் பன்முறை சந்தித்து ஆலோசனைகள் செய்தார்கள். அச்சமயங்களில் அவர்களோடு வேறு அதிசயமான இரண்டு மூன்று ஆசாமிகளும் கலந்து ஆலோசனை செய்தார்கள்.

பிறகு ஐந்தாவது நாள் பராங்குசம் பிள்ளையின் சவம் அடக்கம் செய்யப்பட்டது. அதற்குச் சிங்காரம் பிரபுவும் சுந்தரம்மாள், ஞானம்பாள், பராங்குசம் பிள்ளையின் வக்கீல்கள் முதலியவர்களும் வந்திருந்தார்கள். அடுத்த நாள் துளசிங்கம் பிரபுவின் சவம் அடக்கம்செய்யப்படும் நாள். அன்று காலை பதினொரு மணிக்குச் சவம் மாளிகையிலிருந்து புறப்பட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. லாயர் தம்புசாமிப் பிள்ளையே முதன்மையாக விருந்து எல்லாக் காரியங்களையும் நடத்தினன். அவனே தன் நண்பர்களுக்கு அழைப்புச் சீட்டனுப்பினன். சிங்காரம் பிரபுவுக்கு அனுப்பவில்லை. சுமார் பத்துப் பனிரண்டு பேரே வந்திருந்தனர். அங்கு வந்திருந்தவர்களில் ஒருவர் சிங்காரம் பிரபு வருவாரோ என்று கேட்டார்.

தம்புசாமிப்பிள்ளை:—"எனக்குத் தெரியாது. அவனுடைய தந்தை யவனை யடியோடு நிராகரித்துவிட்டார். அவனை வரும்படி யழைக்கவேண்டியது என் கடமையென்று நான் நினைக்கவில்லை. அவன் புத்திசாலியாக விருந்தால் வரமாட்டானென்றே கருதுகிறேன். அவன் தன் தந்தையின் அனுமதி பெறவில்லை

யென்பதோடு அவர் நோக்கத்திற்கு நேர்மாறாகவே மணம் புரிந்து கொண்டானென்று நீங்கள் அறிந்திருக்கலாம்'' என்றான்.

அதற்கு அம்மனிதர்:—ஆயினும் ஒன்று: சிங்காரம்பிரபு சிறு பையனல்ல. முப்பது வயதிற்கு மேற்பட்டவன். அவன் தன் சுய விச்சைப்படி யெதையும் செய்யக் கூடியவன்.

லாயர்:—இருக்கலாம். அது அவர்கள் குடும்ப விஷயம். அதைப்பற்றி நமக்கு அவசியமில்லை. நாம் அதைக் கவனிக்கவேண்டியதுமில்லை.

அம்மனிதர்:—அது சரிதான். ஆயினும் கடைசியில் எப்படி யாவது, சிங்காரம் பிரபு இங்கு வந்துவிட்டால்....

லாயர் சற்று சிந்தித்து "அப்படியாயின் மரியாதைக் காக அவன் பிரியப்படி நடக்கும்படி விடவேண்டியதே. ஆ! வேளையாய் விட்டது. எல்லாம் ஆயத்தமாக விருக்கின்றன. நாம் புறப்பட வேண்டியதே" என்றான்.

அம்மனிதர்:—யாரோ ஒருவரை யெதிர் பார்ப்பதாய் நீர் கூறினீரென்று நினைக்கிறேன்.

அச்சமயம் இவர்கள் உட்கார்ந்திருந்த பெரிய அறையின் கதவு திறக்கப்பட்டதும், ஒரு வேலைக்காரன் உள்ளே வந்து!"சிங்காரம் பிரபு'' என்று கூவினான்.

---

## 135-வது அத்தியாயம்.

கெடுவான் கேடுநினைப்பான்—மர்மமான கொலைக்குற்றம் வெளியாதல்—லாயர் தம்புசாமிப்பிள்ளையின் சம்பந்தமும் அவன் கைதியாதலும்.

**சிங்காரம் பிரபு** என்ற பெயரைக் கேட்டதே அங்கிருந்த அனைவரும் திடுக்கிட்டு வாயிற்படியை நோக்

கினர்கள். அதற்குள் சிங்காரம் பிரபுவே உள்ளே வந்துவிட்டான். தம்புசாமிப் பிள்ளையின் முகத்தில் கடுமையான கோபம் தோன்றியது. ஆயினும் அவன் அதை யடக்கிக் கொண்டு,

"ஆ! பிரபுவே! தாங்கள் இங்கு வரக்கருதிய வரையில், முன்பு தாங்கள் என்னிடம் கடுமையாகப் பேசியபோதிலும் நான் தங்களுக்கு நல்வரவே யளிக்கிறேன். தங்கள் தந்தையின் சமாதியருகில் எல்லா மனவருத்தமும் மறக்கப்படும் என்று நம்புகிறேன். ஆ! தங்களோடு ஒரு நண்பரும் துக்கங் கொண்டாட வந்திருக்கிருர்" என்ருன்.

ஏனெனில் சிங்காரம் பிரபுவோடு இன்னொரு ஆள் வந்திருந்தான். அவன் வாயிற்படியைத் தாண்டியதும் அங்கேயே தயங்கி நின்றிருந்தான். அவனும் சிங்காரம் பிரபுவைப் போலவே நிறையக் கறுப்புடை யணிந்திருந்தான். சிங்காரம் பிள்ளை தம்புசாமிக்கு நேராக வேறொரு பதிலும் கூருமல் "என் நண்பர் தேவநாயகம்பிள்ளை" யென்ருன்.

தேவநாயகம் பிள்ளை யென்ற அந்த ஆள் உள்ளே வந்து யாவரையும் நோக்கி வந்தன மளித்து விட்டு ஒருபுறமாக ஆசனத்தில் பேசாமலமர்ந்தான்.

அங்கிருந்தவர்கள் ஒருவரை யொருவர் "தேவநாயகம் பிள்ளை யார்?" என்று கேட்டார்கள். எல்லாரும் தெரியாதென்றே தலையசைத்து விட்டார்கள். முன்பு தம்புசாமிப் பிள்ளையிடம் பேசிய மனிதர் அவனை நோக்கி இரகசியமாய் அவன் யார் என்று கேட்டார். லாயர் "எனக்குத் தெரியாது. ஒரு சமயம் சிங்காரம் பிரபு 'இனி நான் வாசித்துக் காட்டப் போகும் மரண சாசனத்தை யாட்சேபிக்க அழைத்து வந்த யாரோ ஒரு தண்ணீர்ப்பந்தல் வக்கீலாகவிருக்கலாம். ஆயினும் வக்கீல் ஜாபிதாவில் இப்பெயரை நான் காணவில்லை. இவன் முகத்தையும் இவன் நடந்து

கொள்ளும் மாதிரியையும் பார்த்தால் இவன் நாகரீகமாவது மரியாதையாவது உடையவனாகப் புலப்படவில்லை. இவன் பார்வையும் அப்படியே காட்டுகிறது" என்றான்.

அதற்கு அம்மனிதர் "இவனுடைய பார்வை மிக்க தீட்சணியமானதாகவும் ஆழ்ந்ததாகவும் தோன்றுகிறது. ஆனால் மற்ற விஷயங்கள் நீர் கூறுவதுபோல் புலப்படவில்லை" என்றார்.

அச்சமயம் எதிர் பார்க்கப்பட்ட ஒரு நண்பரும் வந்துவிட்டார். தம்புசாமிப் பிள்ளை "இனி நாம் காக்கவேண்டிய அவசியமில்லை. புறப்படலாம்" என்றான்.

அச்சமயம் அவன் தேவநாயகம் பிள்ளையை நோக்கினான். அந்த ஆள் தீட்சணியமான பார்வையோடு குறிப்பாகத் தன்னையே நோக்குவதைக் கண்டதும் தம்புசாமிப் பிள்ளையின் மனதில் ஒருவித திகில் உண்டாயிற்று. ஆனால் ஏனென்பது அவனுக்கே புலப்படவில்லை. அவன் முன்கூறியதுபோல் மாணசாசனம் ஆக்ஷேபிக்கப் படுவதாயினும் அதைப்பற்றி யவனுக்கு அச்சமில்லை. ஏனெனில் அப்பத்திரம் சட்டப்படி சரியாக விருக்கிறது. ஆயினும் குற்றம் செய்திருப்பவனுக்குக் கொஞ்சம் சந்தேகத்திற்கும் பயமே. அதிலும் லாயர் தம்புசாமிப் பிள்ளையின் மனச்சாட்சியில் பயங்கரமான குற்றங்க ளிருக்கின்றன.

சவம் மயானபூமிக்குப் புறப்பட்டது. லாயர் தம்புசாமிப் பிள்ளை சிங்காரம் பிரபு ஏறும் வண்டியில் ஏறலாகாதென்று வேறு வண்டியில் ஏறிக்கொண்டான். ஆனால் தெய்வசங்கல்பமோ எப்படியோ அவ் வண்டியில் இவன் எதிரில் தேவநாயகம்பிள்ளை யுட்கார்ந்திருக்கக் கண்டான். வண்டிகள் சென்றுகொண் டிருக்கின்றன. தேவநாயகம் பிள்ளை வெறுப்பும் தீட்சணியமுமான பார்வையாகத் தன்னையே யுற்று நோக்குவதைக்கண்டு லாயரின் மனம் கலங்

கியது. என்ன செய்வான்? கோபத்தோடு "ஏண்டா என்னை யிப்படிப் பார்க்கிறாய்?" என்பதுபோல் முறைத்துப் பார்த்தான். தேவநாயகமோ அதற்குச் சற்றும் கலங்கவில்லை.

பிறகு சந்தோஷமாகவே தம்புசாமிப்பிள்ளை மெதுவாய் அவனோடு சம்பாஷிக்கக் கருதி "இது ஒரு மிக்க துக்ககரமான சம்பவம்" என்றான்.

தேவநாயகம் பிள்ளை "ஆம். யாருக்கு இது துக்கமான சம்பவம் என்கிறீர்? சிங்காரம் பிரபுவுக்கே இது துக்கமான சம்பவம் என்று நீர் கருதுவதாயின் நீர் கூறியது உண்மைதான்" என்றான்.

தம்புசாமிப்பிள்ளை வேறொன்றுங் கூறமுடியாமல் "ஆம். உண்மையே. தங்களுக்குத் துளசிங்கம் பிள்ளை யறிமுகம் என்று கருதுகிறேன்" என்றான்.

தேவநாயகம்:—ஆம்; நான் அவரை யறிவேன்.

லாயர்:—நான் தங்களை யொருபோதும் இம் மாளிகையில் கண்டதில்லை. அதனாற்றான் கேட்டேன்.

தேவநாயகம்:—நீர் பார்த்திருக்க மாட்டீர்தான்.

லாயர்:—தாங்கள் அப்பிரபுவின் சிநேகரென்று கருதுகிறேன்.

தேவநாயகம்:—இன்றேல் நான் இப்போது இங்கு வந்திருப்பேனென்று நினைக்கிறீரா?

லாயர்:—தாங்கள் ஒரு வக்கீல்போலும்

தேவ:—எதனாலப்படி நினைக்கிறீர்?

லாயர் தாழ்ந்த குரலாய் "வாரும் அய்யா! ஒரே தொழிலைச் சேர்ந்த நாம் மனம் விட்டுப் பேசவேண்டும். சட்ட சம்பந்தமான விஷயம் ஏதேனு மிருந்தால் நாம் களங்கமின்றிப் பேசலாம். நான் எங்கிருக்கிறேனென்பது

உமக்குத் தெரியும். அதைவிட்டு ஓடிவிடமாட்டேன்" என்றான்.

தேவநாயகம்—"அப்படிச் செய்யமாட்டீரென்று நான் அறிவேன். ஆயினும் தாம் தவருகக் கருதினீர். நான் தங்கள் தொழிலைச் சேர்ந்தவனல்ல" என்றான்.

அவன், தான் யாரென்பதைக் கூருததைப்பற்றி லாயருக்குக் கோபமே. ஆயினும் என்செய்வான்?

அதற்குள் சமாதியை நெருங்கி விட்டார்கள். அங்கு நடக்கவேண்டிய கிரியைகள் யாவும் நடந்தன. இடையில் தேவநாயகம் பிள்ளை தன்னையே குறிப்பாகப் பார்ப்பதைக் கண்ட தம்புசாமிப் பிள்ளைக்கு மனதில் திகில் விர்த்தி யடையத் தொடங்கியது. சடங்கு முடிந்தபின் மாளிகைக்குத் திரும்பும்போது லாயர் ஜாக்கிரதையாகத் தேவநாயகம் ஏறும் வண்டியில் குந்தாமல் தப்பித்துக்கொண்டான்.

யாவரும் வீடுபோய்ச் சேர்ந்தபோது நாராயணன் என்ற வேலைக்காரன் சிங்காரம் பிரபுவைக் கண்டு "யாவும் சரியாய் நிறைவேறின" என்பதுபோல் சமிக்கைசெய்தான். அதன்பிறகு அவர்கள் ஆசாரப்படி யாவரும் சிற்றுண்டியருந்தினர்கள். எல்லாம் முடிந்தபின் தம்புசாமிப்பிள்ளை யாவரையும் நோக்கி "ஐயன்மீர்! இப்போது யாவரும் ஆசனங்களில் அமர்வீர்களாயின் இறந்துபோன துளசிங்கம் பிரபு எழுதிவைத்திருக்கும் மரணசாசனத்தை யுங்களுக்கு வாசித்துக் காட்டுகிறேன்" என்றான்.

உடனே சிங்காரம் பிரபு தலைப்பிலிருந்த ஆசனத்தில் போய் உட்கார்ந்தான். மற்றவர்களும் உட்கார்ந்தார்கள். தேவநாயகம்பிள்ளை ஒரு ஓரத்தில் இருந்த ஆசனத்திலமர்ந்தான். தம்புசாமிபிள்ளை அங்கிருந்த ஒரு பெட்டியைத் திறந்து பத்திரத்தை யெடுத்துக் கொண்டு சிங்காரம் பிரபுவின் வலப்புறம் வந்துநின்று வாசிக்க ஆயத்தமானுன்.

அப்போது சிங்காரம் பிரபு "ஒரு சமயம இம்மரண சாசனத்தி லடங்கிய சங்கதிகளையறிய வேண்டிய அக்கரையுள்ள வேறு சிலர் இருக்கலாம்" என்றான். தம்புசாமி கோபத்தோடு "என்ன வேறு சிலரா? என்ன உம்முடைய அர்த்தம்? இங்கு யார் அதிகார சுதந்தரம் பாராட்டுவது?" என்றான்.

சிங்காரம்பிரபு:—"நானல்ல- அன்று இம்மாளிகையை விட்டுச் சென்றவன் இன்று வரை இங்குவந்தேனோ? நான் எனக்குச் சொந்தமல்லாத விடத்தில் இரவல் அதிகாரம் காட்டப் பிரியப்படுகிறவனல்ல..." என்று கூறிக் கொண்டிருக்கையிலேயே, நாராயணன் என்ற வேலைக்காரன் அங்கு வந்து சிங்காரம் பிரபுவை நோக்கி "பிரபுவே! சில மனிதர்கள் வருகிறார்கள்" என்றான்.

இம்மொழிகளைக் கேட்டதே தம்புசாமி தட்டென்றெழுந்து நின்றான். அதேவிநாடி பிரபுவின் கடன்காரர்களனைவரும் ஒருவர் பின் ஒருவராய் உள்ளேவந்தார்கள். ரொட்டிக்காரன், பலசரக்குக் கடைக்காரன், ஜவுளிவியாபாரி, பால்காரன் முதலிய யாவரும் வந்தார்கள். அவர்கள் அனைவருக்கும் இறந்த பிரபுவின் வக்கீல்கள் முன் அணியில் நின்று வழிகாட்டிகள் போல் வந்தார்கள்.

தம்புசாமிபிள்ளை முதலில் பிரமை யடைந்துவிட்டான். அவன் முகம் வெளுத்து விட்டது. சிங்காரம் பிரபுவை நோக்கி "இது உம்மால் நடத்தபடும் வேடிக்கை நாடகம் போலும்" என்றான். பிறகு ஒருவாறு சமாளித்துக்கொண்டு வந்தவர்களை நோக்கி "வாருங்கள்; உட்காருங்கள்; இங்குள்ள அனேகரைவிட நீங்கள் இம்மரண சாசனத்திலுள்ள விஷயங்களை யறிய அக்கரையுடையவர்களே" என்றான். பிறகு சிங்காரம்பிள்ளையை நோக்கி "பிரபுவே! தங்களுக்கு இவர்கள் இங்கு வந்திருக்க வேண்டு மென்று பிரியமிருந்தால் எனக்

கொரு ஆட்சேபணையுமில்லை. இவர்களில் சிலர் நான் அறிந்தவர்களே. இதோ திருஷ்டாந்தமாக என் சகாக்களாகிய லாயர்கள்." என்றான்.

வந்தவர்கள் என்னமோ அவனிடம் முகங் கொடுத்துப் பேசவேயில்லை. அதன்பிறகு அவன் "ஐயன்மீர்! இறந்து போன துளசிங்கம் பிரபுவின் மரண சாசனத்தை வாசித்துக் காட்டுகிறேன்" என்று கூறிவிட்டு வாசிக்கத் தொடங்கினான். அவன் கரங்கள் நடுங்கின; நாகுழறியது. ஆயினும் கஷ்டத்தோடு சமாளித்துக்கொண்டு வார்த்தை வார்த்தையாக நிதானமாய் அச்சாசன முழுமையும் வாசித்து முடித்தான்.

மரணசாசனம் சுருக்கமாகவேயிருந்தது. நியாயமாகக் கொடுக்கவேண்டிய கடன்களைக் கொடுத்துவிட்டு மீதியிருப்பதில் மூன்றில் ஒரு பாகம் வைத்தியசாலை பாடசாலை முதலிய தருமங்களுக்களித்துவிட்டு இரண்டு பாகங்களை என் நண்பர் லாயர் தம்புசாமிபிள்ளை யடையவேண்டியது என்று எழுதியிருந்தது. இச்சங்கதி யாவர்களுக்கும் முன்னமே தெரியுமாதலால் ஒருவரும் வியப்படையவில்லை. ஆனால் அனேகருடைய கோபப்பார்வை தம்புசாமிபிள்ளையின் மேல் நாட்டப்பட்டது.

சாசனம் வாசிக்கப்பட்டதும் சிங்காரம் பிரபு யாவரையும் நோக்கி,

"நீங்களனைவரும் இம்மரண சாசனத்தி லடங்கிய விஷயங்களைக் கேட்டீர்கள். இதில் என் சுயநலத்தைப்பற்றி நான் எள்ளளவும் கவனிக்கவில்லை. ஆனால் இம்மரணசாசனத்தில் குறித்தபடியே யாவும் பூரணமாக நடைபெற வேண்டுமென்பதே யென் கோரிக்கை" என்றான்.

தம்புசாமிபிள்ளை:—"ஆம்; யாவும் பூரணமாகவே நிறைவேற்றப்பட வேண்டியதுதான்" என்றான்.

சிங்காரம்பிரபு:—அய்யா! நான் கூறும் கருத்திற்கும் உமது கருத்திற்கும் மிக்க வித்தியாச மிருக்கிறது. என் கருத்து இதில் கூறியபடி கடன்கள் யாவும் பைசல் செய்யப்பட வேண்டும்.

தம்பு:—ஆகா! கடன்களனைத்தும் பைசல் செய்யப்பட்டே தீர்ந்தன.

சிங்:—பைசல் செய்யப்படுவதற்கும் பூரணமாகக் கொடுக்கப்படுவதற்கும் மிக்க வித்தியாச மிருக்கிறது.

தம்பு:—சட்டப்படி பைசல் செய்யப்பட்ட தென்ருல் முழுமையும் அளிக்கப்பட்ட தென்றே பொருள்.

சிங்காரம்பிரபு:—இவ்விஷயத்தில் சட்டம் உமக்கு உதவியா யிருக்கலாம். ஆனல் உமக்கு எச்சரிக்கை செய்வதாவது இதோ விருக்கிற கடன்காரர்கள் அனைவரும் பூரணமாகத் திருப்தி செய்விக்கப் படவேண்டும். இவர்கள் கடன் ஒரு காசும் குறையாம லளிக்கப் படவேண்டும்.

தம்புசாமிப்பிள்ளை கோபத்தோடு "நீரென்ன இவ்வளவு அதிகப்பிரசங்கம் செய்கிறீர். உமது மிரட்டலுக்கு நான் அஞ்சியவனல்ல. சட்டம் என் பட்சத்தி லிருக்கிறதென்று நீரே கூறினீரல்லவா. விவகாரப்படி யாவும் நடந்தே யிருக்கின்றன. இதற்குமேல் நீர் இதைப்பற்றிப் பேசவேண்டிய நியாயமில்லை." என்று இறுமாப்போடு கூறினன்.

அங்கு வந்திருந்த கடன்காரருக்கெல்லாம் சொத்து முழுமைக்கும் இவனே பாத்தியஸ்தனுய் விட்டானென்ற சங்கதி இப்போதுதான் தெரிந்தது. அதனல் அவன் தங்களை மோசம் செய்துவிட்டுப் பெருந் தொகையை யபகரித்துக் கொண்டா னென்று இப்போது விளங்கிவிட்டது. அதனுலவர்கள் மிக்க கோபமடைந்தார்கள். தம்புசாமிப்

பிள்ளை தைரியத்தோடு பேசினாலும் அவனுக்கு உள்ளே கொஞ்சம் திகிலாகவே யிருந்தது.

சிங்காரம்பிரபு அவனை நோக்கி "அய்யா! நீர் மிக்க பலத்தோடிருப்பதாய்க் கருதும்போது உண்மையில் மிக்க பலகீனமான நிலைமையிலிருப்பதே உண்மையாக விருக்கும். இவர்களுக்குச் சேரவேண்டிய தொகையைப் பூரணமா யளித்துச் சமாதானம் செய்துகொள்ளும். உமது தலைக்கு மேல் மேகம் குமுறிக்கொண் டிருக்கிறது; மின்னலு மிடியும் ஆயத்தமாக விருக்கின்றன வென்று கருதும்" என்றான்.

இம் மொழிகளைக் கேட்ட தம்புசாமிப்பிள்ளை மிக்க கோபமடைந்து "என்ன அதிகப்பிரசங்கித் தனமான வார்த்தை. என்னையா பயமுறுத்துகிறாய்?" என்றான். ஆனால் அவன் மனதில் ஒருவிதத் திகிலுண்டாயிற்று. உடனே தேவநாயகன் இருக்குமிடத்தை நோக்கினான். அந்த ஆசனம் காலியாக விருப்பதைக் கண்டு பின்னால் திரும்பியபோது தேவநாயகம் என்பவன் தன் பின்னால் நிற்பதையும் அவன் மிக்க வெறுப்போடும் கோபத்தோடும் தன்னையே முறைத்துப் பார்ப்பதையுங் கண்டான். லாயருக்குப் பின்னும் திகில் அதிகமாய் விட்டது. காரணமோ தெரியவில்லை. நமக்கு ஏதேனும் ஆபத்து நேர்வதாயின் இவனிடமிருந்தே யுண்டாக வேண்டுமென்று அவன் மனதிற்குப் புலப்பட்டது. ஆயினும் எவ்விதமாக நேரிடுமென்பது புலப்படவில்லை. அச்சமயம் சிங்காரம்பிரபு தம்புசாமிப் பிள்ளையை நோக்கி,

"அய்யா! நான் இன்னொரு முறை யும்மை வேண்டிக் கொள்கிறேன். நியாயப்படி இக் கடன்காரருக்குச் சேர வேண்டிய தொகையைப் பேசாமல் கொடுத்துவிடும். வீணாய் அவர்கள் மனம் புண்படச் செய்யவேண்டாம்" என்றான்.

லாயர் "இவன் நம்மை நல்லதனம் செய்து இக் கடன் காரருக்குப் பணம் வாங்கி யளிக்க முயல்கிறுன்" என்று எண்ணிக்கொண்டு அகங்காரத்தோடு "சரி. இந்த வீண் நாடகம் போதும். நீர் உமது வேலையைப் பார்த்துக் கொண்டு போம்." என்று கூறிவிட்டு, அங்குள்ள மற்ற பேரை நோக்கி "அய்யன்மீர்! உங்களுக்கெல்லாம் இனியும் இங்கு தாமதித்திருக்க வேண்டிய வேலை யொன்றையும் காணேம். எனக்கும் வெளியில் மிக்க அலுவல்க ளிருப்ப தால் நான் போய் வருகிறேன்" என்று கூறி ஆசனத்தை விட்டெழுந்தான்.

அச்சமயம் லாயரின் பின்னுலிருந்த தேவநாயகம் என் பவன் "அய்யா! நீர் என்கூட வரவேண்டும்" என்று கூறிக் கொண்டே அவன் தோளைப்பற்றினுன். தம்புசாமிப்பிள்ளை திடுக்கிட்டு "உன் கூடவா நான் வரவேண்டும்?" என்றுன்.

அதற்கு அம்மனிதன் "ஆம் என் கூடத்தான். நான் உன்னை யரசன் பெயரால் கைது செய்கிறேன்" என்றுன். இதைக்கேட்டதே தம்புசாமிப்பிள்ளை பேரிடி விழுந்தவன் போலாகி வாய் குழறிக்கொண்டே "அப்படியாயின் நீ, நீ, நீ யார்?" என்றுன். அவன் "நான் துப்பறியும் இரகசிய போலீஸ் இலாகா உத்தியோகஸ்தனுகிய இரங்காராவ்" என்றுன்.

தம்புசாமிபிள்ளை அதற்குள் ஏதோ ஆலோசித்துக் கொண்டு "சே சே! இதற்கெல்லாம் நானல்ல பயப்படுகிற வன். இது ஒரு வீண்மிரட்டு. இது இதோ இம்மனிதனுல் உண்டாக்கப்பட்ட நாடகம்" என்று சிங்காரம் பிரபுவைக் குறிப்பாய் வெறுப்போடு நோக்கி விட்டுப் பிறகு இரங்க ராவை நோக்கி "உமக்கு இம் மரணசாசனத்தைப் பற்றி ஏதேனும் சந்தேகமுளதோ?" என்றுன். இரங்காராவ்

"எனக்கு உன் மாணசாசனத்தைப் பற்றி அக்கரையே யில்லை" என்றான்.

தம்புசாமிப்பிள்ளை வாய்குழறிக்கொண்டே "அப்படியா யின் நீர் நீர்—என்னை என்ன குற்றத்திற்காகச் சிறை செய்கி றீர்?" என்றான். அச்சமயம் அவன் மனதில் பலயோசனைக ளுதித்தன. முகம் சவம்போல் வெளுத்துவிட்டது.

இரங்கராவ்:—அய்யா! சுமார் ஒருவருஷ காலமாகக் கண்டு பிடிக்கப்படாமல் பெரிய மர்மத்திலிருக்கும் ஒரு குற் றம் — அதாவது சின்னம்மாள் என்ற கிழவியைக் கொன்ற குற்றத்திற்காக உன்னைக் கைதுசெய்கி றேன்" என்றான்.

அம்மொழிகளைக்கேட்டதே லாயர், "ஆ! கடவுளே!" என்று ஆவிசோர்ந்து ஆசனத்திலுட்கார்ந்து சாய்ந்து விட் டான். அங்கிருந்தவர்களில் சிங்காரம் பிரபுவுக்கும் ஸார் ஜெண்டுக்கும் மட்டுமே இந்த இரகசியம் தெரியும். மற்ற பேரெல்லாம் நடந்தவிஷயத்தைக் கண்டதே மிக்க வியப்பும் பிரமையு மடைந்தார்கள்.

தம்புசாமிப்பிள்ளை சற்றுநேரத்திற்குள் தன் மனதைத் தைரியம் செய்துகொண்டு, அங்கிருந்தவர்களை நோக்கி "நண்பர்களே! இப்போது ஏதோ தவறால் இது நடந்திருக் கிறது. இப்போது நான் கைதுசெய்யப்பட்டாலும் நியாயாதி பதியிடம் சென்றதே விடுதலையடைந்து வந்து சேருவேன். இது இதோவிருக்கும் சிங்காரம்பிரபு வேண்டுமென்று செய்த சேஷ்டையேயாகும். ஏன்? இவர்மனைவிதான் இக்கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு விசாரணை நடந்து கடைசியில் ஏதோ அற்ப சந்தேகத்தால் தப்பித்துக்கொண் டாள் என்பது யாவருமறிந்த விஷயந்தானே" என்றான்.

சிங்காரம் பிரபு:—"அய்யா! அடக்கும் உமது பேச்சை. வீணாக நிரபராதியாகிய ஒருத்திமேல் அபாண்டம்

கூறவேண்டாம். இரங்காவ் உமது வேலையைச் செய்யும்.” என்றான்.

தம்புசாமிப்பிள்ளை:—“நான் பேசாமல் உன்கூட வருகிறேன்” என்றான்.

ஆனால் போலீஸ் அதிகாரியோடு செல்லும்போது அவன் தேகம் நடுங்குவதையும், முகம் சவம்போல் வெளுத்துவிட்டதையும், அவன் தள்ளாடிக்கொண்டு செல்வதையும் கண்டவர்கள் இவன் இக் குற்றத்தைச் செய்தே யிருக்கவேண்டும்” என்று எண்ணிக் கொண்டார்கள். அதனால் அனைவரும் மௌனமாக ஒருவர் முகத்தை யொருவர் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

போலீஸ் அதிகாரியும் குற்றவாளியும் சென்ற பின் சிங்காரம் பிரபு அங்கிருந்த கடன்காரரை நோக்கி “ஐயன்மீர்! உங்களுக்கு நியாயப்படி நடத்தி வைக்க நான் செய்த முயற்சி ஜெயமடையவில்லை. இதுவரையும் அக்கள்ளப் பயல் கடின நெஞ்சோடேயே யிருந்தானெனினும், சிறைவாசத்தால் அவனுக்கு நல்ல புத்தி வரும் என்று நம்பலாம்” என்றான்.

---

## 136-வது அத்தியாயம்.

### தம்புசாமிப் பிள்ளையைக் கைதியாக்க நேர்ந்த ருசுக்கள் சின்னம்மாளின் கொலை விஷயம் — மச்சநாதம் பிரபுவும் மங்கம்மாளும்.

இப்போது தம்புசாமிப் பிள்ளையைக் கொலைக் குற்றத்திற்காகக் கைது செய்தது எப்படி நேர்ந்தது. அதற்கு என்ன ருசுவுகள் எற்பட்டன என்பதைப்பற்றிக் கூறுவோம்.

சிங்காரம் பிரபுவின் அந்தரங்க வேலையாளாகிய நாராயணன் அப்பிரபுவிடம் பராங்குசம் பிள்ளை வீட்டில் முதலில் கூறிய சங்கதி பின் வருமாறு:—

"பிரபுவே! சின்னம்மாள் என்ற கிழவி கொல்லப்பட்ட தினம் அக்கிழவியிடம் லாயர் தம்புசாமிப் பிள்ளை பேசிக் கொண்டிருந்ததை நான் கண்டேன். அவர்கள் அக்கிழவி கொல்லப்பட்டிருந்த அதே சந்தில் அதே விடத்தில் பேசிக் கொண்டிருந்தார்கள். பிறகு நடந்த விசாரணையில் ருசுவான சங்கதிகளால் இவனே அவளைக் கொன்றிருப்பான் என்று நம்பக்கூடியதாக விருக்கிறது. நான் இவர்களைப் பார்த்த போது தம்புசாமிப் பிள்ளை யென்னைப் பார்க்கவில்லை. நான் தாங்கள் கூறிய ஒரு வேலையாகச் சென்று மிக்க துரிதமாக வந்து கொண்டிருந்தேன்.

பிறகு அவள் கொலையுண்ட சங்கதியை நான் கேள்விப் பட்டபோது எள்ளளவுகூட இவன் மேல் எனக்குச் சந்தேகம் உண்டாகவில்லை. இவ்வளவு கௌரவமாக விருக்கும் மனிதன் இத்தகைய காரியத்தைச் செய்வானென்று என் புத்திக்குத் தோன்றவில்லை. நாம் இதைப்பற்றி வெளியில் பிரஸ்தாபித்தாலும் அவன் மேல் ஐயம் உண்டாக்குவதாகும் என்று அதைப்பற்றி நான் ஒருவரிடமும் கூறவில்லை. சீக்கிரத்தில் கொலையாளி கண்டு பிடிக்கப்பட்டதாகச் சங்கதி வந்ததே, நாம் பேசாமலிருந்ததே மிக்க நலமாயிற் றென்று எண்ணிக் கொண்டேன். அக்குற்றவாளி நிரபராதி யென்று விடுதலை செய்யப்பட்ட போதும் நான் இவன் கொலை செய்திருக்கலாகும் என்று நினைக்கவில்லை. பிறகு இச்சங்கதியை யடியோடு மறந்தே போய்விட்டேன்.

இப்போது இவனுடைய உண்மை நடக்கை வெளியான போது அந்த நினைப்பு என் மனதில் உதித்தது. இத்

தகைய மனிதன் எத்தகைய பாதகத்தையும் செய்ய அஞ்சமாட்டான் என்று நன்ருகத் தெரிகிறது.”

இம்மொழிகளைக் கேட்ட பின் சிங்காரம் பிரபு மச்ச நாதம் பிரபுவோடு கலந்து பேசத் தீர்மானித்தான். “தம்பு சாமிப்பிள்ளை அக்கொலையைச் செய்திருப்பான் என்பது நடந்திருக்கக் கூடிய சம்பவமல்ல. ஆனல் அக்கொலையை யார் செய்தது என்ற உண்மை வெளிவரின் அது மிக்க மர்மமான பெரிய ஆச்சரியமான விஷயமாகவே யிருக்க வேண்டும். இவன் இக்கொலை செய்தான் என்பதை விட மிக்க ஆச்சரியமான சம்பவங்களெல்லாம் நடத்திருக்கின் றன” என்று தனக்குள் சிந்தித்துக் கொண்டான். இதனுற் ருன் அவன் தன் மனைவியிடங் கூட இதைப்பற்றி முதலில் கூறவில்லை யென்பது இதை வாசிப்போர்க்கு இப்போது நன்கு புலப்படலாம். இது பெரிய சந்தேகமான விபரீதம் என்பதோடு உண்ணுமுலை யதேகுற்றம் சாட்டப்பட்டு விடுதலையடைந்தவளானதால் பழைய சங்கதிகள் யாவும் அவள் நினைவிற்கு வந்து வியாகூலத்தை யுண்டாக்குமென் பது சிங்காரம் பிரபுவின் கருத்து.

அதன் பிறகு சிங்காரம் பிரபு மச்சநாதம் பிரபுவிடம் கலந்து பேசினன். அவர் இருபத்துநான்குமணி நேரம் ஆலோசனை செய்ய வேண்டுமென்ருர். ஆனல் அதற்கிடை யில் நேர்ந்த சம்பவங்களால் மச்சநாதம் பிரபு தம்புசாமிப் பிள்ளையே யக்கொலையைச் செய்திருப்பானென்று நம்பத் தக்க அத்தாட்சிகள் கிடைத்தன. அவற்றை விவரமாகக் கூறினுற்ருன் விளங்கும்.

சிங்காரம் பிரபு மச்சநாதம் பிரபுவைக் கண்டு பேசி விட்டுச் சென்ற அன்று இரவு சுமார் எட்டு மணிக்கு வானத் தில் கரியமேகம் நிறைந்து மழை பிசு பிசு வென்று தூறிக் கொண்டிருந்தது. அச்சமயம் மச்சநாதம் பிரபு தாம் ஏறிச்

செல்லும் வண்டியை விட்டிறங்கிக் கள்ளர் வீதியில் பிரவேசித்தார். அவ்வீதி அவ்வளவாக யோக்கியமானவர்கள் வசிக்கும் வீதியல்ல. ஆயினும் அங்கு இரண்டொரு நல்ல மனிதர் வசிக்கும் வீடுகளும் இரண்டு மூன்று மரியாதையான கடைகளும் இருக்கின்றன.

மச்சநாதம் பிரபு அவ்வீதி வழியாகச் சென்றுகொண்டிருக்கையில் ஒரு தொழிற்சாலையின் சாளரத்தில் ஒரு படத்தைக் கண்டு திடுக்கிட்டு நின்றார். அது நீலாட்சியின் அழகிய உருவம். அவ்வுருவம் ஞானம்பாள் எழுதிய நீலாட்சியின் உருவம் போலவே யிருந்தது. அங்கிருந்த ஐந்தாறு பிரபு வமிசத்தைச் சேர்ந்தவர்களுடைய படங்களில் ஒன்றாக விருந்தது. அவற்றில் கனம் அச்சுதன் படமுமிருந்தது. நீலாட்சியின் படத்தைப் பார்த்துவிட்டு அப்புறம் சென்றார். அவர் தமக்குள் "ஆ! அந்த வீடு நன்றாகத் தெரியும். ஆயினும் நாம் விசாரிக்கப் போவது வியர்த்தமாகும். அந்தோ! இருபது வருடங்களாய் விட்டன. அத்தகைய பரிதாபமான ஆட்கள் இதுகாறும் இருபது இடங்கள் மாறறிக் கொண்டு போயிருப்பார்கள். ஆயினும் ஒரு சமயம் அப் பரிதாபமான மாது இப்போதும் துயரமான நிலைமையிலிருந்தால்-நாமளிக்கும் சொல்ப உதவிகூட அவளுக்கு நன்மை பயக்கக்கூடுமாயின்..." என்று சிந்தித்துக் கொண்டே சென்றார்.

அவர் வீடுகளின் இலக்கத்தைப் பார்த்துக் கொண்டே போய்க் கடைசியில் ஒரு வீட்டின் கதவைத் தட்டினார். உடனே ஒரு மாது வந்து கதவைத்திறந்தாள். அவளுக்கு வயது நாற்பதிருக்கும். அவள் வயதில் நல்ல அழகுடையவளாகவே யிருந்தாளென்று தெரிகிறது. ஆனால் இப்போது அழகு மாறித் தடித்த உருவமுடையவளா யிருக்கிறாள். அவள் கதவைத் திறந்து இப்பிரபுவைக் கண்டதும் ஏதோ

நெடுநாள் அறிமுகமுடையவள் போல் "அய்யா! வாருங்கள் உள்ளே" என்றாள்.

பிரபு அவள் உருவத்தையும் நடக்கையையும் கண்டு வெறுப்புற்றார். அதற்குள் அம்மாது என்னமோ ஒருவித நினைப்பு வரவும் திடீலென்று "ஆ! தாங்கள் லாயர் தம்பு சாமிப்பிள்ளையிட மிருந்து தான் வந்தீர்கள் போலும்" என்றாள்.

இதைக் கேட்ட பிரபு பின்னும் வியப்படைந்து திடுக்கிட்டார். ஆயினும் யாவும் மறைத்துக்கொண்டு "சரி. ஆனால் இதே வீடுதான் போலும்......" என்றார்.

அம்மாது "சரி சரி. ஒன்றும் தவறில்லை; தம்புசாமிப் பிள்ளை அல்லது அவர் நண்பர்" என்றாள்.

பிரபு:—"ஆம் நண்பரே; அவருக்கு விசேஷ வேலையிருக்கிறது. அதனால்..." என்பதற்குள் அம்மாது "சரி சரி. என்ன விவகாரம் என்று விசாரிக்கத் தங்களை யனுப்பினர்" என்று கூறினாள். பிரபு ஆம் அப்படித்தான் என்றார்.

அம்மாது "என் பெயர் மங்கம்மாள். நான்றான் அக்கடிதத்தை யெழுதியவள்" என்றாள். அதன்பின் அவள், பிரபு வாரும் என்று உள்ளே யழைத்துக் கொண்டு சென்று ஒரு அலங்கரிக்கப்பட்ட அறையில் உட்காரவைத்தாள். பிரபு தற்செயலாக இங்கு தம்புசாமிப் பிள்ளையைப்பற்றிய ஏதோ சமாசாரம் கிடைக்கும் போல் தோன்றுகிறது என்று உணர்ந்தார். ஆகையால் அவன் சந்தேகம் தோன்றி யிருக்கிறவரையில் இங்கு என்ன சங்கதி கிடைக்கிற தென்பதை முழுதும் கண்டறிவோம் என்று தமக்குள் தீர்மானித்துக் கொண்டார்.

அம்மாது அவரை யுற்று நோக்கி "நான் தங்களை முன்பு கண்டிருப்பது போல் தோன்றுகிறது" என்றாள். பிரபு "இருக்கலாம். ஒரு கால் என் பெயரென்ன வென்

றறிய விரும்புகிருய் போலும். நான் கூற ஒரு ஆட்சேபணை யுமில்லை" என்ருர். அம்மாது "இல்லை யில்லை. நான் அப்படி நினைக்கவில்லை. பெயரைப்பற்றி அவசியமேயில்லை. தாங்கள் அவருக்காக வந்த வரையில் தங்களோடு நடத்தும் விவகாரம் அவரோடு நடத்துவது போலவே ஆகும் அல்லவா?" என்ருள்.

பிரபு:—"ஆம் ஆம் தடையின்றி. இனி நாம் விவகாரத்தைக் கவனிப்போம். ஆ முன்னே கொஞ்சம் ஒயின் அருந்துவோம்" என்று கூறி ஒரு சவரனை யெடுத்து அவளிடமளித்து, "நான் இங்குவந்து செல்வதை யொருவரும்காணலாகாது" என்ருர். அம்மாது "ஆம் ஆம்; சரிதான். நானே இதோ வீதியிலுள்ள கடைக்குச் சென்று நல்ல ஒயின் வாங்கிக் கொண்டு வருகிறேன்" என்று கூறிவிட்டுச் சென்ருள்.

பிரபு "ஆ! நல்லகாரியம் செய்தோம். இத்தகைய ஆசாமிக்குச் சம்பாஷணைக்கு முன் கொஞ்சம் சாராயவெறி யேற்றுவது நலம். எந்த இரகசியத்தையும் தாராளமாக வெளியிட்டு விடுவாள்" என்று தமக்குத் தாமே சிந்தித்துக் கொண்டார். சற்று நேரத்திற்குள் அம்மாது ஒரு புட்டி ஒயினும் கிண்ணங்கள் இரண்டும் கொண்டுவந்து வைத்தாள். பவுனில் மிச்சப்பட்ட பணத்தை யவள் கொடுக்கவில்லை. பிரபுவும் கொடுப்பா ளென்று எதிர்பார்க்கவில்லை. பிரபு ஒயினைக் கிண்ணத்தில் தாராளமாக விட்டு முன்னே அம்மாதுக்கு அளித்தார். அவள் அதை யருந்தியபின், "சரி இனி விவகாரத்தைத் தொடங்கலாமே" என்ருர்.

மங்கம்மாள்:—உண்மை யென்னவெனில் இப்பொழுது எனக்குக் கொஞ்சம் கஷ்டகாலம்......

பிரபு:—அதைப்பற்றி அவசியமேயில்லை. நீ என்னிடம் களங்கமின்றி யாவும் தாராளமாக வெளியிடலாம்.

மங்க:—அக்கடிதத்தில் நான் கொஞ்சம் பயமுறுத்தும் வார்த்தைகளை யெழுதினாலும் உண்மையில் சற்றும் தீங்கு நினைத்தவளல்ல. மேலும் அதில் நான் எழுதிய வார்த்தைகள் பயமுறுத்தும் வார்த்தைகள் என்று நினைப்பதற்கில்லை. 'தங்கள் நன்மைக்காகவே தாங்கள் அவசியம் வரவேண்டும். இன்றேல் தங்களுக்கே கெடுதியாக முடியும்' என்று மட்டுமே யெழுதி யிருந்தேன்.

பிரபு:—அது சரிதான். இப்போது உன்னிடம் சிக்கியிருக்கும் இரகசியம் என்ன? அதைக்கூறு. அதற்காக நான் உனக்கு நல்ல பரிசளிப்பேன்.

மங்கம்மாள்:—" அது சின்னம்மாள் என்ற கிழவியைப் பற்றிய சமாசாரம்" என்றாள்.

இதைக்கேட்டதே பிரபு மிக்க வியப்படைந்து "ஆ! சின்னம்மாளா?" என்றார். அம்மாது "ஆம். அவள் இங்கு தான் வாசம் செய்துகொண்டிருந்தாள். கொல்லப்பட்ட போது இங்கு தான் இருந்துவந்தாள். என் அக்கொலையைப்பற்றிப் பத்திரிகைகளில் பிரசுரித்திருந்ததில் கள்ளத் தெரு நாற்பத்திரண்டாவது நம்பர் வீட்டில் வசித்துக் கொண்டிருந்தாளென்று கூறப்பட்டிருந்ததே. தாங்கள் அதைக் கவனித்திருந்தால் இப்போது நாம் செல்வது அந்த வீடேயென்று தங்கள் புத்திக்குப் புலப்பட்டிருக்கவேண்டுமே" என்றாள்.

பிரபு:—நான் பத்திரிகைகளில் அச்சங்கதியைப்பற்றி நன்றாய்க் கவனிக்கவில்லை. சின்னம்மாளை நீயறிவாயா?

மங்க:—அறிவாயா! அவள் கொல்லப்பட்டபோது இங்கு தான் வசித்துக்கொண் டிருந்தாள் - அவள் சவம் போலீஸாரால் சவச்சாலைக்குக் கொண்டு வரப்பட்டிருந்தபோது நான் போய்ப் பார்த்துத்தான் அவள்

அடையாளங்களை யறிந்து அவள் யாரென்று அறிவித்தேன்.

பிரபு:—"சரி. இப்போது சங்கதியைக் கூறு. எனக்குத் தம்புசாமிப் பிள்ளையைப்பற்றி மிக்க விசனமாக விருக்கிறது. அந்த இரகசியத்தைக் கூறு. நான் கூறியபடியுனக்கு நல்ல பரிசு கிடைக்கும்-இதோ இப்போது இந்தப் பத்துப்பவுன்களை முன்பணமாக வைத்துக் கொள்" என்று பணத்தைக் கொடுத்தார்.

அப்பணத்தைத் தொட்டதும் மங்கம்மாள் மிக்க சந்தோஷமடைந்தாள். அச்சமயம் பார்த்துப் பிரபு பின்னுமொரு கிண்ணம் ஒயின் ஊற்றி யளித்து "இனிச் சங்கதியைக்கூறு" என்றார்.

அம்மாது "சின்னம்மாள் கொலையுண்டபின் போலீஸார் இங்கு வந்து அவளுடைய சொத்துக்கள் எவையாகிலுமிருக்கின்றனவா வென்று கேட்டார்கள். நான் அவள் பெட்டி முதலிய யாவும் பார்த்தேன். அவள் சில சமயம் நல்ல ஸ்திதியிலும் சில சமயம் மிக்க கஷ்டமான நிலைமையிலுமிருந்தாள். அவள் பெட்டியில் காசு ஒன்றுமில்லை. ஆனால் ஒரு கடிதக்கட்டிருந்தது. நான் அதில் ஒரு சமயம் அவளுடைய நடவடிக்கையைப்பற்றி நிரூபிக்கத்தக்க விஷயம் ஏதேனுமிருந்தால் அதனால் என் வீட்டிற்கு அகௌரவமுண்டாகுமென்று கருதி அக்கடிதக்கட்டை மட்டும் எடுத்து வைத்துக்கொண்டு மற்றவற்றைப் போலீஸாரிடமளித்துவிட்டேன்.

பிறகு நான் அக்கடிதக்கட்டைப் பிரித்துப்பார்த்தேன். அதில் அனேகமாய் வாலிபர் காதலிகளுக்கெழுதுவதும் கன்னிகைகள் தம் காதலர்க்கெழுதுவதுமாகிய காதற் கடிதங்களே யிருந்தன. ஆயினும் அவற்றில் லாயர் தம்புசாமிப்பிள்ளை சின்னம்மாளுக்கு எழுதிய கடிதம் ஒன்றிருந்

தது. அதில் அவர் ஏதோ தன்னைப்பற்றிய ஒரு பெரிய இரகசியத்தை வெளியிட வேண்டாமென்று அவளை மிகவும் வேண்டிக்கொண்டிருந்தார். கடைசியில் 'நீ கேட்கும் பணம் ஐயாயிரம் பவுன் மிக அதிகம். ஆயினும் நாளை மாலை சரியாய் ஒன்பது மணிக்குப் பாலத்தின் தென்கோடியிலுள்ள சந்தில் வந்திருந்தால் நான் பணத்தைக் கொண்டுவந்து தருகிறேன்' என்று எழுதியிருந்தார். மறுநாள் மாலை வெளியில் சென்ற சின்னம்மாள் திரும்பிவரவில்லை..." என்றதே,

பிரபு 'ஆகா!' என்று இரண்டொரு நிமிடங்கள் சிந்தித்த பின் "சின்னம்மாளிடம் சிக்கியிருந்த இரகசியம் இன்னதென்று அக்கடிதத்தில் சற்றும் உணரக்கூடவில்லையோ? நன்ருகச் சிந்தித்துப்பார்" என்ருர்.

மங்கம்மாள்—"ஆ. ஆம் ஆம். இப்போது நினைவுவருகிறது. அந்த இரகசியம் ஏதோ ஒரு ஜமீன் சம்பந்தமான பாத்தியதையைக் குறிக்கும் பத்திரத்தைப்பற்றியது" என்ருள்.

பிரபு "இப்போது அக்கடிதம் உன்னிடம் இருக்கிறதா?" என்ருர். அம்மாது "இல்லை. அதையொரு கன்னிகை வந்து வாங்கிக்கொண்டு போய்விட்டாள்" என்ருள். பிரபு 'எந்தக் கன்னிகை?' என்ருர். அம்மாது "அப்போது அவள் யாரென்று எனக்குத் தெரியாது; கொலை நடந்த சுமார் மூன்ருவது நாள் ஒரு அழகிய வாலிபமான கன்னிகை நெடுக கறுப்புடையும் முகமூடியுமணிந்து கொண்டு வந்து 'சின்னம்மாள் வசித்துக்கொண்டிருந்த வீடு இதுதானு?' வென்று கேட்டாள். நான் ஆம் என்றேன். அதன்மேல் அவள், நானே வீட்டுக்காரி யென்றறிந்து கொண்டு சின்னம்மாளுடைய சாமான்களைப்பற்றி என்னிடம் கேட்டாள். நான் 'அவற்றிற்கு நீ பாத்தியஸ்தியாயின்

கொடுக்க ஆக்ஷேபணையில்லை. ஆனால் இப்போது அவை போலீஸார் வசத்திலிருக்கின்றன' வென்றேன். அதன்மேலவள் 'அவற்றில் ஏதேனும் கடிதக்கட்டிருந்ததோ?' வென்று விசாரித்தபோது நான் 'ஆம்; சில கடிதங்கள் ஒருகட்டாகக் கட்டி வைக்கப்பட்டிருந்தன; அவை யிப்போது என்னிடமிருக்கின்றன' என்று கூறினேன். அக்கன்னிகை 'நீ என் கடிதக்கட்டை மட்டும் எடுத்துவைத்துக் கொண்டா' யென்று சொன்னாள். நான் 'அக்கடிதங்களில் யாரேனும் மரியாதையான மாதர்களின் வெளிவரலாகாத இரகசியங்களடங்கியிருக்கலாகும் என்று சந்தேகித்தே அவற்றைமட்டும் எடுத்து வைத்துக்கொண்டேன்' என்றேன். அக்கன்னிகை 'நீ யக்கடிதங்களை வாசித்துப்பார்த்திருப்பா' யென்றாள். நான் அடியோடில்லை யென்றால் அவள் நம்பமாட்டாளென்று கருதி 'அவற்றைச் சாவதானமாக வாசிக்கலாமென்று கருதியப்படியே வைத்திருக்கிறேன்' என்றேன்.

அக்கன்னிகை யதன்மேல் 'உனக்கு இருபது பவுன் அளிக்கிறேன்; அக்கடிதக்கட்டை யப்படியே யென்னிடம் கொடுத்துவிடு' என்றாள். நான் அவற்றை யின்னொரு முறை படித்துப்பார்த்து, இவள் போன்ற ஒரு கன்னிகையைப்பற்றி எவையேனும் கடிதங்களிருக்கின்றனவென்று தோன்றும் பட்சத்தில் இவளிடம் சரியான தொகை கேட்கலாமெனக் கருதி அவளை நோக்கி 'அம்மா! நாளைக் காலை எட்டுமணிக்கு அல்லது இதேவேளைக்கு வந்தால் ஆயத்தமாக எடுத்து வைக்கிறேன்' என்றேன்.

அவள் ஒரே பிடிவாதமாய் 'அதெல்லாம் உதவாது; இருபதல்ல, இதோ அதிலும் அதிகத் தொகை. இப்போதே கடிதக்கட்டை யென்னிடம் கொடுத்துவிட்டு இப்பணத்தை யெடுத்துக்கொள். இன்றேல் இனி மறுபடி நாம் சந்திப்பதேயில்லை. கடிதக்கட்டை நீயே

வைத்துக்கொள்' என்று கூறிப் பணத்தை மேஜைமேல் வைத்தாள். நான் பார்த்தேன், இச்சமயம் தவறினல் பிறகு அக்கடிதங்களுக்கு அவ்வளவு பணம் வருவது நிச்சய மில்லை யென்று கருதி உடனே அதை யெடுத்துக் கொடுத்துவிட்டுப் பணத்தைப் பெற்றுக் கொண்டேன். அதில் தம்புசாமிப்பிள்ளை யெழுதிய கடிதம் இருந்தது" என்ருள்.

பிரபு:--சரி. தம்புசாமிப் பிள்ளையின் கடிதத்தை நல்ல இலா பத்திற்கு விற்கலாமென்றே நீ யதைப் போலீ ஸாரிடம் கொடுக்காமல் வைத்திருந்தாய்.

மங்கம்மாள்:—ஆம். ஆனல் நான் தம்புசாமிப்பிள்ளை யக் குற்றத்தைச் செய்தான் என்று நினைக்கவில்லை. ஏனெ னில் அப்போது உண்ணமுலை யதே குற்றத்திற்காகச் சிறைசெய்யப்பட்டு விசாரணை நடந்துகொண் டிருந் தது. அச்சமயம் அவன் அக்குற்றத்தைச் செய்தான் என்பதில் யாரும் சந்தேகம் கொள்வதற்கில்லை.

பிரபு:—அம்மாது அக்கடிதங்களை என்ன காரணங்களால் வாங்கினுள் என்று நீ கருதினுய்.

மங்க:—அவள் தன்னைப்பற்றிய இரகசியங்கள் அவற்றில் இருக்கு மென்று கருதியே வாங்கினு ளென்று கருதினேன்.

பிரபு:—அதனுல்தான் நீ தக்ககிரயம் வந்தால் போது மென்று அவற்றைக் கொடுத்து விட்டாய். அவள் யார் தெரியுமோ?

மங்க:—அவள் தன்னை நான் அறிந்துகொள்ள லாகாதென்று மிக்க சாக்கிரதை யெடுத்துக் கொண்டாள். நான் அவளை யறிய விரும்புகிறேனென்று அவள் கருதினுள். அது உண்மையே. அவள் உள்ளே வரும் போது தெரு வாயிற்படிக் கதவின் சாவியைக் கையில் எடுத்து

வந்து விட்டாள். கடைசியில் செல்லும் போது தெருக் கதவை வெளிப்பக்கம் பூட்டிக்கொண்டு சாவியை வீதியில் எறிந்து விட்டுப் போய்விட்டாள். யாரேனும் பின் தொடர்ந்து வந்து தன் இருப்பிடத்தைக் கண்டு அதன் மூலமாகத் தன்னை யறிந்துகொள்வார்க ளென்று எண்ணி அவள் அப்படிச் செய்தாள்.

பிரபு:—அவள் எண்ணம் நிறைவேறி விட்டதல்லவா?

மங்கம்:—அவள் அவ்வளவு சாமார்த்தியமாக நடந்து கொண்டாளெனினும் கடைசியில் அவள் எண்ணம் பலிக்கவில்லை.

பிரபு:—"எப்படி? யெப்படி?" என்று ஆவலோடு கேட்டார்.

மங்கம்:—அம்மாது வரும்போது என் வேலைக்காரியே கதவைத்திறந்தாள். பிறகு நானும் அம்மாதும் சம்பாஷித்துக் கொண்டிருக்கையில் அவ்வேலைக்காரி கடை வீதிக்குச் சென்றிருந்தாள். அவள் இம்மாதின் உருவத்தையும் உடைமுதலியவற்றையும் நன்றாய்க் கவனித்திருந்தாள். அவள் கடையிலிருந்து வீட்டிற்குத் திரும்பி வரும்போது வழியில் அடுத்த வீதியில் இம்மாது செல்வதையும், ஒரு வாலிபன் இவளைத் தொடர்ந்து சென்றதையும், பிறகு இருவரும் ஒரு தீபத்தினருகிற் சென்றபோது அம்மாது தன் முகமூடியை நீக்கியபோது நன்றாய் அவள் முகத்தையும் கண்டாள்.

பிரபு:—அப்படியாயின் அவள் யாரென்று கூறினளோ?

மங்கம்:—"இல்லை யில்லை. அவள் யாரென்று நேற்று வரை தெரியாது. நேற்று அவ்வேலைக்காரி என்னிடம் ஓடி வந்து "அம்மா! அம்மா!! அம்மாது யாரென்று இப்போது தெரிந்து கொண்டேன்" என்று மிக்க உற்சாகத்தோடு கூறினள். நான் அவளைப்பற்றிய சங்கதியை யடியோடு மறந்து விட்டதால் "எம்மாது?" என்

றேன். வேலைக்காரி "அம்மாதுதான். சுமார் ஒரு வருடத்திற்கு முன் இங்கு வந்தாளே — நெடுக்கக் கறுப்புடையும் முகமூடியு மணிந்துகொண்டு வந்தாளே அவள்" என்றாள். நான் அவளை எங்கே கண்டாய் என்றேன். அவள் "இதோ! சமீபத்திலிருக்கும் படங்கள் விற்கும் சித்திரசாலைக்குவா காட்டுகிறேன்" என்றாள். நான் உடனே எழுந்து அவள் கூடச்சென்று அவள் காட்டிய படத்தில் ஒன்று வாங்கிக்கொண்டு வந்தேன். இதோ அப்படம்" என்று கூறி எழுந்துபோய் அப் படத்தைக்கொண்டு வந்து காட்டினாள்.

பிரபு அப்படத்தைக் கண்டதும் மிக்க வியப்படைந்து "ஆ!" என்றார்.

மங்கம்மாள்:—"தங்களுக்கு லாயர் தம்புசாமிப் பிள்ளை நண்பராகையால் அவர் சகோதரர் புத்திரி உங்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கவேண்டியதே" என்றாள்.

பிரபு:—ஆம் ஆம். அவர் சகோதரன் மகள் நீலாட்சியே.

மங்கம்மாள்:—இப்படத்திலுள்ளவள் கனம் அச்சுதம் பிள்ளையின் மனைவி யென்பதை யறிந்ததே நான் விசாரிக்கத் தொடங்கி இவள் யார் என்ற உண்மையை யறிந்து கொண்டேன்.

பிரபு—"சரி சரி. அப்படியாயின் தம்புசாமிப் பிள்ளையின் சகோதரன் புத்திரியே யுன்னிடம் வந்து அக்கடிதங் களை வாங்கிக் கொண்டு சென்றாள்" என்று கூறிவிட்டு "சரி. அத்தகைய இரகசியம் அவள் கையில் சிக்கி யிருப்பதால் தான் அவள் அவனை யாட்டுகிறாள்" என்று நினைத்துக் கொண்டார்.

மங்கம்மாள்:—அதனால் தான் இம்மாது யாரென்று நேற்றுத் தெரிந்ததே எனக்குச் சங்கதி பட்டப் பகல் போல் விளங்கி விட்டது.

பிரபு:—அதாவது அக்கடிதத்திற்காகவே அவள் வந்து எல்லாக் கடிதங்களையும் வாங்கிக்கொண்டு போனுள். என்று அறிந்து கொண்டாய்.

மங்கம்:—"சந்தேக மென்ன? தங்கள் நண்பரைப் பற்றி இப்படிக் கூறுகிறே னென்று தாங்கள்..." என் பதற்குள்,

பிரபு:—"தம்புசாமிப் பிள்ளையா? அவன் என் நண்பனல்ல" என்றார்.

---

## 137-வது அத்தியாயம்.

### மச்சநாதம் பிரபு தம்புசாமிப்பிள்ளையைக் கைதியாக்க எடுத்துக்கொண்ட முயற்சிகள்.

பிரபு "அவன் என் நண்பனல்ல" என்று கூறியதைக் கேட்டதே மங்கம்மாள் திடுக்கிட்டுப் பெருந்திகி லடைந்தாள். அவள் முகம் சவம் போல் வெளுத்து விட்டது. அவள் ஆத்திரத்தோடு பிரபுவை நோக்கி "அந்தோ! அப்படியாயின் தாங்கள் யார்?" என்றுள்.

பிரபு:—நான் யாராகவாவதிருக்கட்டும். தம்புசாமிப் பிள்ளை யின் சினேகனல்ல வென்பது உனக்குத் தெரிய வேண்டியது.

மங்க:—அந்தோ! நான் என்ன காரியம் செய்துவிட்டேன். தாங்கள் போலீஸ் உத்தியோகஸ்தராக்கும் - தங்களை யெங்கோ பார்த்திருக்கிறேன்...

பிரபு:—நான் உத்தியோகஸ்தனல்ல.

மங்க:—பின்னையேன் அவன் சினேகிதன் என்று கூறினீர். என்னை ஏமாற்றி விட்டீர்.

பிரபு:—ஏறக்குறைய நீ கூறுவதில் உண்மை யிருக்கிறது. ஆனல் நான் உன்னைச் சந்தேகத்தில் விட்டு விட்டுச்

செல்ல மாட்டேன். உனக்கு ஒரு கெடுதியும் வாராது. அதற்கு மாருக நல்லபரிசு கிடைக்கும். அதோடு நீ எனக்கு இன்னும் அனுகூலம் செய்யலாம்.

மங்கம்:—சரி. தாங்கள் யார்? ஏன் இப்படி என்னை யேமாற்றினீர். நான் தம்புசாமிப் பிள்ளைக்குக் கடிதம் எழுதியது உமக்கெப்படித் தெரியும்?

பிரபு:—எனக்கு நீயே கூறினதன்றி வேறென்றும் தெரியாது. நான் இங்கு வந்த காரணம் முற்றும் வேருன ஒரு சங்கதியைப் பற்றி விசாரிப்பதற்கே.

மங்கம்:—என்ன சங்கதி?

பிரபு:—இருபது வருடங்களுக்கு முன்......

மங்கம்:—ஆம் ஆம். நான் உம்மைப் பார்த்திருக்கிறேன். தெரிகிறது தெரிகிறது...

பிரபு:—இருபது வருடங்களுக்கு முன் இங்கு ஒரு பெண் இருந்தாள்

மங்கம்:—ஆ! மீனும்பாள்?

பிரபு:—அவள் என்னவிதமானுள்?

மங்கம்:—தாங்கள் அவளைக் காணவந்து சென்றதே அவள் எங்கோ போய் விட்டாள். அவள் கருவுற்றிருந்தாள். ஆயினும் மறுபடி தீயவழியில் பிரவேசிக்க மறுத்து விட்டாள். தாங்கள் அவளைக் காப்பாற்றியதைப்பற்றி எவ்வளவோ புகழ்ந்து கூறினுள். எப்போதும் தங்களைப் பற்றிக் கடவுளைப் பிரார்த்திப்பதாகக் கூறினுள். அந்தச் சின்னம்மாளே அவளையக்கெதி யாக்கியவள்.

பிரபு:—ஆ! கடவுள் கடைசியில் அச் சண்டாளிக்குத் தக்க தண்டனையே விதித்தார்.

மங்கம்:—இன்னெரு விசேஷம். சின்னம்மாள் கொலையுண்ட தினத்திற்குச் சுமார் ஒரு வாரத்திற்கு முன் மீனும்பாளைக் கடைவீதியில் கண்டதாகவும், எங்கிருக்

கிருய் என்று கேட்டதற்கு ஒருதகவலும் கூறவில்லை யென்றும் இயம்பினுள்.

பிரபு:—மீனும்பாள் என் பெயரைக் கூறினுளா ?

மங்கம்:—இல்லை. ஆனுல் அவள்பேசியமாதிரியால் தங்கள் பெயர் அவளுக்குத் தெரியுமென்று தோன்றியது.

பிரபு:—பாபம்! அவள் இருக்கிருள் என்று மட்டும் தெரிகிறது; அதாவது ஒரு வருடத்திற்குமுன் இருந்தாள். நீ இருபது வருடங்களாக இங்கேயே வாசம்செய்து வருகிருயா ?

மங்கம்:—இல்லை யில்லை. பலவிடங்களில் வசித்துக் கொண்டிருந்தேன். என் காலம் கீழும் மேலுமாக மாறிக்கொண்டிருந்தது. கடைசியில் இவ்வீட்டிற்கு முதலாளியானேன். இதில் ஒரு அதிசயம். நான் நாட்டிலிருந்து ஏமாற்றி வஞ்சிக்கப் பட்டபோது முதலில் இதே வீட்டிற்குத்தான் கொண்டுவரப் பட்டேன். அப்போது சின்னம்மாள் வசத்திலிருந்தது இந்த வீடு. இப்போது வீட்டுச் சொந்தக்காரருக்குப் பாக்கியாய் இருக்கிறது.

பிரபு:—இது அதிசயமே. மீனும்பாளைப் பற்றிப் பேசுவோம். பிறகு இன்னும் முக்கியமான விஷயங்கள் பேசவேண்டியிருக்கின்றன. நீ கொடுக்கவேண்டியவாடகையைப் பற்றிக் கலவரம் வைத்துக் கொள்ளாதே. அத்தொகையை நான் அளிக்கிறேன்.

மங்கம்மாள் மிக்க சந்தோஷமடைந்தாள். பிரபு மெதுவாக "இருபதுவருடங்களுக்கு முன் நான் போக்கிரிப்பயலாக விருந்தேன். ஒருநாளிரவு சூதாட்டத்தை விட்டு ஒரு வீதிவழியாக சென்றுகொண் டிருக்கையில் அந்த ஏழைப் பெண்ணைப் பார்த்தேன். அவள் தான் கருப்பமாகவிருப்பதாகவும், ஒரு துஷ்டன் தன்னை வஞ்சித்தழைத்து வந்து

கடைசியில் கைவிட்டுவிட்டதாகவும் கூறினுள்..." என்ருர்.

மங்கம்:—அவன் பெயரைக் கூறினுளோ?

பிரபு:—:—இல்லே.

மங்க:—என்னிடம் கூட அவள் தன்னைத் துரோகம் செய்தவனுடைய பெயரைக் கூறவில்லே. அவள் அவனை யுண்மையாகக் காதலித்திருந்தாள் அவன் துரோகம் செய்துவிட்டுப் போய்விட்டான். அவள் தங்களிடம் கூறியதெல்லாம் உண்மையே. அவனைத்தவிர வேறு எவ்வகையிலும் அவள் தவருன வழியில் பிரவேசிக்கவில்லே.

பிரபு:—நான் அவளைச் சந்தித்தபோது அவளுடைய பரிதாபமான சரித்திரத்தைக் கேட்டு அவளுக் குதவி செய்தேன். அப்போது அவள் எங்கு வசிப்பதென்பதைக் கேட்டறிந்து கொண்டேன். மறுநாள் இங்கு வந்தேன். அவளைப்பற்றி விசாரிக்கவே வந்தேன். ஏனெனில் அவள் கூறியசங்கதி மெய்யோ பொய்யோ வென்றறிய விரும்பினேன்

மங்க:—ஆம். எனக்கு நினைவிருக்கிறது. தாங்கள் இரண்டு முறை இங்கு வந்தீர்கள். நானே இருமுறைகளிலும் கதவைத்திறந்தேன்.

பிரபு இதைக்கேட்டதே மிக்க வியப்படைந்து "ஆ! தெய்வமே! நீயா? மிக்க அழகிய சுறுசுறுப்பான கன்னிகை. அடடா! இப்போது இந்த நிலைமையிலிருக்கிருய்" என்ருர்.

மங்கம்மாள் தன் பூர்வநிலைமையை நினைத்து கண்ணீர் விட்டாள். அந்தோ! அறிவு மயங்கித் துஷ்ட ஆடவர் மயக்கிற்சிக்கிக் கற்பையிழந்தபின் துக்கப்படுவதில் பயனென்னை.

பிரபு:—அவளுக்குத் தேறுதல் கூறிவிட்டு "ஆம் நான் முதல் முறை அவளைப்பற்றி விசாரிக்க வந்தேன். இரண்டாம் முறை அவள் இந்த விடத்தைவிட்டுச்

சென்று வேறெங்கேனும் சேர்ந்து மரியாதையாகச் சீவனம் செய்வதற்கு ஏதேனும் பொருளுதவி செய்யக்கருதியே வந்தேன். கெட்ட சுபாவங்களைக்கண்டு கண்டு எனக்கு மனிதரிடம் நம்பிக்கையே யற்றுவிட்டது. இருக்கட்டும். இப்போது உனக்கு எவ்வளவு கடன் இருக்கும்" என்று கேட்டார்.

உண்மையில் மங்கம்மாளுக்குச் சுமார் வீட்டு வாடகையும் மற்ற கடன்களும் சேர்ந்து அறுபது பவுன்தானிருக்கும். ஆனால் அவள் எண்பது பவுன் என்றாள். பிரபு நூறு பவுன் அவளிடம் கொடுத்து, நீ என் வார்த்தைகளை நம்பு. தம்புசாமிப்பிள்ளை தண்டனை யடைகிற தினம் இன்னும் நூறு பவுன் உனக்குத்தருவேன்" என்றார்.

மங்கம்மாள்:—தாங்கள் அவ்வாறு செய்யக் கருதுகிறீர்களோ ?

பிரபு:—ஆம்; தடையின்றி. அப்படிப்பட்ட அக்கிரமஸ்தனைத் தண்டனை யடையச் செய்யவேண்டும். நியாயத்தை நிலை நிறுத்துவதற்காக அப்படிச் செய்தே தீரவேண்டும். அவன் கொலைசெய்ய அநியாயமாக நிரபராதியாகிய ஒரு கன்னிகை பிடிக்கப்பட்டு எவ்வளவோ கஷ்டங்களை யனுபவித்தாள் - அவளுக்காகவாவது அவன் தண்டனை யடையவேண்டும். மெய்யான குற்றவாளி தண்டிக்கப்பட்டால் தான் அவள் மேலிருக்கிற கொஞ்சநஞ்ச சந்தேகமும் நீங்கும். இத்தகைய பரம துஷ்டனைச் சும்மா விட்டுவிடுவது பெரும் பாபமாகும்.

மங்க:—அப்படி யாயின் நான் செய்யவேண்டிய தென்ன? தம்புசாமி என்னைக்காண வந்தால் நான் எவ்வாறு நடந்து கொள்வது ?

பிரபு:—அவன் எப்போது வருவான் என்று கருதுகிறாய் ?

மங்க:—இன்று மாலை அல்லது நாளை மாலை வருவான். அவன் போன்றவர்கள் இத்தகையை விடத்திற்குப் பகலில் வரமாட்டார்க ளென்று கருதியே மாலையில் வரும்படி எழுதினேன்.

பிரபு:—"அவன் வந்தால் முதல் தடவை அவனைக்காணுதே. நீ வெளியில் பொயிருப்பதாகவும் நாளை மாலை சரியாய் ஒன்பது மணிக்கு வரும்படி கூறி விட்டுச் சென்றதாக வும் உன் வேலைக்காரியிடம் சொல்லிச் சொல்லும்படி செய். நான் நாளை இரவு சரியாய் எட்டு அல்லது எட்டரை மணிக்கு இங்கு வருகிறேன்" என்ருர்.

மங்கம்மாள்:—அப்படியே செய்கிறேன். நீலாட்சியும் அக் கொலையில் சம்மந்தப்பட்டிருப்பா ளென்று நினைக் கிறீர்களா ?

பிரபு:—இல்லை. அவள் சம்பந்தப்பட்டில்லை. கொலை நடந்த வேளைக்கு அந்த விடத்தில் தம்புசாமிபிள்ளை யிருந்த தைப் பார்த்திருக்கிருர்கள்.

மங்க:—அப்படியானுல் அவள் ஏன் வந்து அக்கடிதங்களை விலைக்கு வாங்கிக் கொண்டு சென்ருள் ?

பிரபு:—அதற்கு இரண்டு காரணங்களில் ஒன்றிருக்கலாம். ஒன்று அவனே அக்கடிதங்களை வாங்கி வரும்படி அவளைத் தூண்டி யிருக்கலாம். அதற்குக் காரணம் தன் கடிதத்தால் சந்தேக முண்டாகும் என்றும் உண்மை யில் தான் கொலை செய்ய வில்லை யென்று மிக்க தந்தி ரமாகக் கூறி யிருக்கலாகும். அல்லது தான் கொலைசெய் ததையே கூறியிருந்தாலு மிருக்கலாம். ஆயினும் நான் அவன் கூறி யிருப்பா னென்று நம்பவில்லை. இரண்டா வது நீலாட்சியின் கடிதங்கள் ஏதேனும் அக்கிழவி யிடம் எவ்விதத்திலாவது சிக்கியிருந்து அவை வெளி வாாதபடி தடுப்பதற்காக அக்கன்னிகைவந்து அவற்றை

வாங்கி யிருக்கலாம். எவ்விதத்திலாயினும் அக்கடிதம் அவளிடம் சிக்கியதற்கு முன் அவளுக்குத் தம்புசாமி பிள்ளை இதில் சம்பந்தப்பட்டிருக்கிற சங்கதியே தெரியாது. ஏன் இதைப்பற்றிய விஷயம் உனக்குக் கொஞ்சம் ஜாடையாகவாவது தெரிந்திருக்க வேண்டுமே. நீ அக்கடிதங்களைப் படித்துப்பார்த்தா யல்லவா ?

மங்கம்மாள்:—படித்துப் பார்த்தேன். அவற்றில் சிலவற்றில் நீலாட்சி என்ற பெயரைக் கண்டதாகவே எனக்கு நினை விருக்கிறது. ஆயினும் அவ்வளவு நிச்சயமாகக் கூற முடியாது.

பிரபு:—அதைப்பற்றி அக்கரை யில்லை. நான் கூறிய சங்கதி கவனமிருக்கட்டும். ஏதேனும் சூது செய்தாயோ பத்திரம் பத்திரம்- நான் கூறியபடி நடந்து கொண்டால் உனக்கு நல்ல பரிசு கிடைக்கும். உனக்கு ஒரு கஷ்டமும் உண்டாகாது. நான் உன்னைக் காப்பாற்றுவேன். உடனே தம்புசாமிபிள்ளையின் பின் ஒரு துப்பறிபவனைக் காவல் வைப்பேன். அவனைக்கைது செய்யச் சமயம் நேரிடும் வரையில் துப்பறிபவன் அவன் மேல் கண்வைத்துக் கொண்டிருப்பான். நீ வேறு ஒரு யோசனையும் செய்யாதே.

மங்கம்மாள்:—"நான் தங்களுக்குத் துரோகம் செய்யமாட்டேன். தாங்கள் கூறியபடியே நடந்து கொள்வேன்" என்றாள்.

அதன்மேல் பிரபு அவள் வீட்டை விட்டுப் புறப்பட்டார். அவர் சொன்னபடி தமது நண்பரான ஒரு உத்தியோகஸ்தரிடம் சென்று ஆலோசிக்க அவர் துப்பறியும் உத்தியோகஸ்தராகிய இரங்கராவைச் சிபாரிசு செய்தார். அவனும் இன்னொரு ஆளும் உடனே அதைப்பற்றிய வேலையைச் செய்யத் தொடங்கி விட்டார்கள். மூன்றாவது ஒரு

துப்பறிபவன் தம்புசாமிபிள்ளையின் மேல் காவல் வைக்கப் பட்டான்.

பிரபு மங்கம்மாளிடம் ஏற்பாடு செய்தபடி மறு நாள் இரவு எட்டரை மணிக்குச் சரியாய் பிரபுவும் இரங்கராவும் மங்கம்மாள் வீட்டிற்குச் சென்றார்கள். அங்கு இரண்டு பெரிய அறைக ளிருக்கின்றன. இரண்டிற் கும் இடையில் மடிக்கும் கதவுக ளிருக்கின்றன. அங்கு ஒரு அறையில் பேசுவோர் சங்கதியை இன்னொரு அறையி லிருப்போர் கேட்கலாகும். பிரபுவும் இரங்கராவும் இரவு எட்டரை மணிக்குச் சென்று மங்கம்மாளுக்கு நடக்கவேண் டிய விஷயத்தைப்பற்றி யோசனை கூறி விட்டு, அறையில் உட்கார்ந்து கொண்டார்கள்.

சரியாய் ஒன்பது மணிக்கு லாயர் தம்புசாமிபிள்ளை மங்கம்மாள் வீட்டிற்கு வந்தான். அவன் பிரபுவும் இரங்க ராவு மிருக்கும் அறைக்குப் பக்கத்தறையில் மங்கம்மாளோடு உட்கார்ந்தான். அவன் நெஞ்சம் குற்றமுள்ள நெஞ்சம். அவ்வீடு சின்னம்மாள் வசித்திருந்த வீடென்றும், மங்கம் மாள் கடிதத்தில் எழுதியிருந்த மாதிரியால் அவள் தான் அவள் கையில் சிக்கியிருப்பதாய்க் கருதியிருக் கிறாள் என்று உணர்ந்தான். ஆயினும் பணம் கொடுத்தால் எல்லாவற்றையும் சரிப்படுத்திக் கொள்ளலாம் என்று எண் ணிக்கொண்டான்.

மங்கம்மாள் பிரபுவும் இரங்கராவும் எப்படி நடந்து கொள்ளும்படி கூறினார்களோ அவ்வாறே தவறாமல் நடந்து கொண்டாள். "தாங்கள் சின்னம்மாளுக்கு எழுதிய கடிதத்தைப் பற்றி எனக்குத் தெரியும். தங்களுக்குத் தொழில்முறைமையில் மிக்க அவமானத்தையும், தங்களுக்கு மிக்க ஆபத்தையும் உண்டாக்கக் கூடிய ஒரு பயங்கர இரகசியம் அவளுக்குத் தெரிந்திருப்பதாகவும் அவள்

அதை வெளியிடுவதாகப் பயமுறுத்தி யிருந்ததாகவும் கூறி அப்படி வெளியிட வேண்டா மென்று அவளை மிகவும் வேண்டிக்கொண் டிருந்தீர்கள். அதற்காக அவள் கேட்ட படி ஐயாயிரம் பவுன் அவளுக்குக் கொடுப்பதாகவும் அதற்காக அவள், மறுநாள் பாலத்தின் கோடியிலுள்ள சந்தில் அவள் வந்திருக்க வேண்டு மென்றும் எழுதி யிருந்தீர்கள்" என்றாள். பிறகு நீலாட்சி வந்து கடிதங்களை வாங்கிச் சென்றதைக் கூறி, "பார்த்தீரா, நீலாட்சி தாங்கள் எழுதிய கடிதத்தை வாங்கி வைத்துக்கொண்டாள். அதை வெளியிடாமலிருக்க அவளுக்கு முப்பதினாயிரம்பவுன் சீதனமாகக் கொடுத்தீர்கள்" என்றாள்.

தம்புசாமிபிள்ளை:—"ஆ! அப்படியாயின் நீலாட்சி என்னைக் காட்டிக் கொடுத்து விட்டாள்" என்று எச்சரிக்கை தவறிக் கூறிவிட்டான்.

மங்கம்மாள்:—"இல்லை. அவள் வேண்டுமென்று உம்மைக் காட்டிக் கொடுக்கவில்லை. எப்படியோ, நான் அந்த இரகசியத்தை யறிந்துகொண்டேன்" என்றாள்.

அதன்பிறகு தம்புசாமிப்பிள்ளை அவளுடைய அபிப்பிராயம் என்னவென்று விசாரித்துக்கொண்டே தான் நிரபராதி யென்றும் ஆயினும் உலகில் வீண் சந்தேகத்திற்கு இடங்கொடாம லிருப்பதற்காகவே தான் அது வெளிவரலாகாதென்று கருதுவதாகவும் கூறினான். கடைசியில் அவள் நெடுந் தூரத்திலுள்ள மேற்கு நாட்டிற்குப் போய்விட வேண்டு மென்றும் அவள் புறப்படுகிறதினம் 500 பவுன் கொடுப்பதாகவும், பிறகு வருடா வருடம் அதில் பாதி தொகை அனுப்பி வருவதாகவும் கூறினான். மங்கம்மாள் அதற்குச் சம்மதிக்க அவள் மறுநாளே புறப்படுவதென்று ஏற்பாடு செய்யப்பட்டது. அதற்கும் அவள் சம்மதித்தாள். தம்புசாமிப்பிள்ளை மறுநாள் காலை ஏழுமணிக்கு வருவதாக

வும் அவள் புறப்பட ஆயத்தமாக விருக்கவேண்டுமென்றும் கூறிவிட்டுச் சென்ருன்.

மறுநாள் காலை ஏழுமணிக்கு முன்னுடியே மச்சநாதம் பிரபுவும் துப்பறிபவனும் மங்கம்மாள் வீட்டில் முன்னுள் இருந்த அறையில் வந்து உட்கார்ந்திருந்தார்கள். தம்புசாமிப் பிள்ளை ஏழுமணிக்கு வந்து மங்கம்மாளிடம் 500 பவுன் கொடுத்துவிட்டு "நான் வாக்களித்ததைவிட அதிகமே கொடுக்கிறேன். அதாவது இதோ ஒரு உண்டி. இதை மேற்கு நாட்டின் தலைநகரத்தில் இருக்கும் ஒரு பிரதான பாங்கியில் கொண்டுபோய்கொடுத்தால் உடனே 500 பவுன் கொடுப்பார்கள். அப்பாங்கியின் பெயர் உண்டியில் குறிக் கப்பட் டிருக்கிறது" என்ருன்.

அதன்பிறகு தம்புசாமிப் பிள்ளையும் அவள்கூடவே ஒரு வண்டியி லேறிக்கொண்டு இரயில் ஸ்டேஷனுக்குச் சென்று கப்பல் இருக்கும் துறைமுகத்திற்குப் பிரயாணச் சீட்டு வாங்கி மங்கம்மாளை இரயில் வண்டியில் ஏற்றிவிட்டு, வண்டி புறப்பட்டுச் சென்றபின் "அப்பா சனியொழிந்தது, இனி இந்தவிஷயத்தைப்பற்றி கலக்கமே வேண்டியதில்லை" என்று தனக்குத்தானே கூறிக்கொண்டு வீட்டிற்குத் திரும் பினுன்.

மங்கம்மாளோ மூன்ருவது ஸ்டேஷனில் இறங்கி நகரத்திற்கு வந்து நகர ஓரத்திலிருந்த ஒரு வீட்டில் தங்கினுள். தம்புசாமிப்பிள்ளை கொடுத்த பணத்தையும் உண்டியையும் பிரபுவிடமளித்துவிட்டாள். அதனுல் தனக்கு இலாபமே கிடைக்குமென்று அவள் அறிவாள். இதற் கிடையில் மற்ற இரண்டு துப்பறிபவர்களும் சும்மா இல்லை. அவர்கள் சின்னம்மாளுடைய சவத்தை முதலில் கண்ட போலீஸ்காரர்களோடு கலந்து உளவுகளைத் தேடினுர்கள். அவர்கள் மூலமாகத் தங்களுக்கு வேண்டிய எல்லா

சமாசாரங்களையும் விசாரித்தறிந்து கொண்டார்கள். அதன் பிறகு நியாயாதிபதியிடம் மனு வெழுதிக்கொடுத்து உண்ணு முலேயின்மேல் அக்கொலைக்குற்றம் விசாரிக்கப்பட்டபோது கொடுக்கப்பட்ட வாக்குமூலங்களின் நகல்களை வாங்கிக் கொண்டார்கள். அப்போது ஏற்பட்ட சாட்சியங்களில் தங்களுக்கனுகூலமாக ஒன்று இருந்ததைக் கவனித்தார் கள். அதாவது சவத்தைச் சோதனை செய்த இரண வைத்தியர் சின்னம்மாளுடைய நெஞ்சைப்பிடித்து நெறுக் கிக்கொன்ற கரங்கள் உண்ணுமுலேயின் கரங்களைவிடப் பல முடையவைகளாக விருக்கலாகும் என்று கூறியிருந்தார். துப்பறிவோர் அவரைக்கண்டு பேசினார்கள். அவர் "ஆம் ஒரு ஆடவன் கரங்களே அவள் கழுத்தில் காணப்பட்ட காயங்களை யுண்டாக்கின என்று கூறுவது மிகப் பொருத்த மாக விருக்கும்" என்றார்.

அதன்பின் அவர்கள் இன்னும் ஏதேனும் அத்தாட்சிக ளகப்படுகின்றனவா வென்று ஆராய்ச்சி செய்தார்கள். இன்னொரு ருசு இவர்களிடம் கிடைத்தது. அதாவது கொலை நடந்த விடத்தில் அதேவேளையில் தம்புசாமிப் பிள்ளை காணப்பட்டதாக சாக்ஷி கிடைத்தது. குற்ற விசாரணை நடந்தபோது லாயர் தம்புசாமிப்பிள்ளை ஒரு வரும் தன்னை ஏற்படுத்தாதிருந்தும் தானேவலிய விசாரணை நடக்குமிடத்திற்குச் சென்று குற்றவாளியாகிய உண்ணு முலேயின் பட்சத்தில் வாதிப்பதற்காகத் தமக்கு அனுமதி யளிக்கும்படி கேட்ட சங்கதியை நினைத்தார்கள். தம்மேல் சந்தேகம் உண்டாகாதபடி செய்வதற்கே அத்தகைய தந்தி ரம் செய்தான் என்று இப்போது கருதவேண்டியதாயிற்று. இன்னும் வேண்டிய எல்லா சமாசாரங்களையும் பூரணமாய்ச் சேகரம் செய்துகொண்டார்கள். இப்போது தம்புசாமிப் பிள்ளையைக் கைது செய்வதற்குப் போதுமான காரணங்கள்

கிடைத்துவிட்டனவென்று அவர்கள் அறிந்து பிரபுவிடம் கூறினார்கள். பிரபு அதைப்பற்றி சிங்காரம் பிரபுவிடம் ஆலோசனை செய்தபோது சிங்காரம் பிரபு "தன் தந்தையின் கடன்காரருக்குச் சேரவேண்டிய தொகையைக் கொடுத்துவிடும்படி தம்புசாமிப்பிள்ளையைக் கேட்கவேண்டும். அவனைச் சிறைசெய்துவிட்டால் பிறகு அவர்களுக்குப் பணம் கிடைக்காமல் போய்விடும் ஆகையால் என் தந்தையின் சவம் அடைக்கலம் செய்யும் வரையில் தாமதித்தால் நலமாக விருக்கும்" என்றான். அதன்மேல் அவனை யெவ்வாறு கடன்காரருக்குத் திருப்தி செய்யும்படி செய்வதென்று சிந்தித்தே கடன்காரர்களை யச்சமயம் அங்கு வரும்படி செய்வதென்றும், சிங்காரம் பிரபுவும் போலீஸ் உத்தியோகஸ்தனும் கூட அச்சமயம் அங்கு சென்றிருப்பதென்றும், சிங்காரம் பிரபு அவ் விஷயத்தைப்பற்றி யவனிடம் கூறவேண்டுமென்றும் அந்த விஷயம் முடிந்தபின் தம்புசாமிப்பிள்ளையைச் சிறைசெய்வதென்றும் ஏற்பாடு செய்து கொண்டார்கள்.

இக்காரணத்தால் உடனே தம்புசாமிப்பிள்ளையைச் சிறைசெய்வது நிறுத்தப்பட்டு ஆலசியம் நேர்ந்தது. அவன் சிங்காரம் பிரபு வேண்டிக்கொண்டதற்கும் இணங்காமல் பிடிவாதம் செய்ததால் இப்படிப்பட்டவனுக்கு இத்தகைய ஆபத்து நேர்வது நியாயமான தண்டனையே யென்று கருதப்பட்டது.

## 138-வது அத்தியாயம்.

### பல்லவபுரியில் இராஜ சுந்தரியும் கிருஷ்ணராஜுலும்—காதலின் பொறுமை—இந்திரபுரியிலிருந்து வந்த மூன்று கடிதங்கள்.

சிறை செய்யப்பட்ட தம்புசாமிப்பிள்ளையையும் மற்றவர்களையும் இந்திரபுரியில் விட்டுவிட்டு நாம் மறுபடி பல்லவபுரியில் நடக்கும் சம்பவங்களைக் கவனிக்கவேண்டியது நமது கதையின் போக்குக்கு அவசியமாக விருக்கிறது.

லலிதாங்கிச் சிமாட்டியின் கோர சம்பவம் நேர்ந்து பத்து தினங்களாயின. தேவராஜுலுப்பிள்ளை யின்னும் அங்குதானிருக்கிறான். அவன் கிருஷ்ணராஜுலுக்காகவும் அவன் மனைவியாகிய இராஜ சுந்தரிக்காகவும் அங்கு தங்கியிருக்கிறான். இராஜசுந்தரி தான் க்ஷேமமாகப் பல்லவபுரி வந்து சேர்வதற்குப் பேருபகாரம் செய்திருப்பதால் அப்படிப்பட்டவளுடைய வருகைக்காக நாம் பின்னும் சில நாட்களாயினும் தங்கியிருக்கவேண்டியது அவசியமே யென்பது அவன் அபிப்பிராயம். அவன் விடுமுறை வாங்கி வந்த காலம் கழிந்துவிட்டதால் அவன் உடனே நயனபுரியிலிருக்கும் தன் உத்தியோகத்தில் போய்ச் சேரவேண்டியதே. ஆனால் பல்லவபுரியிலுள்ள அவன் நாட்டுமந்திரி அவன் ஆலசியமாய்க் காலவள்விற்கு மேல் தங்கியிருப்பதால் அவனுக்கு ஒரு தீங்கும் வராமல் பார்த்துக்கொள்வதாக வாக்களித்திருந்தார்.

கனம் அச்சுதன் அவன் மனைவியாகிய நீலாட்சி, அவன் சகோதரி ஆகிய இவர்களும் இன்னும் அந்நகரில் உள்ள ஒரு ஹோட்டலில் தான் தங்கியிருக்கிறார்கள். நமது தேவராஜுலு வேறொரு ஹோட்டலில் தங்கியிருக்

கிறான். அவர்களிருக்கு மிடத்திற்கு அவன் அடிக்கடி போவதில்லை. ஞானம்பாள் விஷயமாகத் தான் அச்சுதனோடு சண்டையிட்ட விஷயம் அவன் மனதில் இருந்துகொண் டிருந்தது.

ஒரு நாள் மாலை ஒரு குதிரை வண்டி தேவராஜுலு தங்கி யிருக்கும் ஹோட்டலின் முன் வந்து நின்றதும் ஹோட்டல் காரன் துரிதமாகச்சென்று வந்தவர்களைக் கண்டான். வண் டியில் இராஜசுந்தரியும் அவள் கணவன் கிருஷ்ணராஜுலும் இருந்தார்கள். அவர்கள் வேலைக்காரன் சாரதியோடு வண்டி யின் மேல்தட்டில் உட்கார்ந்திருந்தான். கிருஷ்ணராஜுலு நித்திரை செய்து கொண்டிருந்தான். இராஜசுந்தரி ஹோட் டல் காரனை நோக்கி "அய்யா! ஹோட்டலில் தேவராஜுலுப் பிள்ளை யென்பவர் தங்கியிருக்கிறாரா?" என்று வினவினாள்.

ஹோட்டல்காரன் "ஆம் இங்குதான் வசிக்கிறார்" என்றான். இராஜசுந்தரி "இங்கு தங்க அறைகள் இருக்கின் றனவா?" என்றாள். ஹோட்டல் காரன் "அந்தோ எல் லாம் பூர்த்தியாக விருக்கின்றன. இருந்தால் தேவராஜுலுப் பிள்ளை மிக்க நல்லவர். அவருக்காகத் தங்களுக்குச் சந்தோ ஷமாய் இடமளிப்பேன். மிகக விசனிக்கிறேன்" என்றான்.

இராஜசுந்தரி:—தேவராஜுலுப்பிள்ளை ஹோட்டலி லிருக் கிறாரா?

ஹோட்டல்காரன்:—இல்லை. அவர் இந்நகரி லிருக்கும் அவர்கள் [illegible]திரியின் [illegible]க்குச் சென்றிருக்கிறார்.

இராஜசு[illegible] சமீபத்தில் நல்ல ஹோட்டல் எது இருக் [illegible]?

ஹோ[illegible]டல்காரன் "இவ்வீதியின் [illegible]கோடியில் ஒரு ஹோ[illegible]ல் இருக்கிறது. அங்கு தா[illegible]கள் தங்கலாம்" என்றா[illegible] இராஜசுந்தரி அவனை நோக்கி[illegible] அய்யா! தேவரா ஜுலுப்பிள்ளை[illegible] [illegible]ஜுலுப்பிள்ளையும் அவர்

சென்னை-600 005
186502

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்கள் இயற்றியது

# கனகபூஷணம்.

(இது ஓர் கற்புடைய உத்தமியின் அதிசயமான கதை.)

இதில் கற்பிலக்கணம் விவரமாய் உலக அனுபவத்தோடு விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. இக்கதாநாயகி தனக்கு நேரிடும் மிக்க பயங்கரமான அனேக இக்கட்டுகளிலிருந்து தன் கற்புக்குப் பழுதுவராமல் தப்பித்துக்கொள்வது மிக்க சோகத்தையும் ஆச்சரியத்தையும் தரும். அதோடு இதில் எவ்விதமான நடவடிக்கைகளும், அவைகளாலுண்டாகும் நன்மை தீமைகளும் தெளிவாய்க் கூறப்பட்டிருப்பதால், இது வாசிப்பவர்களுக்குச் சகலவித நற்குணங்களையும் போதிக்கக்கூடியதென்பது உண்மை. ஆண்பாலர், பெண்பாலரிருவர்க்கும் வேண்டிய சகல புத்திமதிகளும் இதில் அடங்கியிருக்கின்றன. இது முழுதும் உலக வழக்கத்தையும் அனுபவமான ஆசாரத்தையும் ஒட்டி எழுதப்பட்டிருக்கிறது.

முதல்பாகம் ரூ. 1—12—0 2-ம் பாகம் ரூ. 1—12—0

---

# இரத்தினபுரி இரகசியம்.

## ஓர் அற்புதமான தமிழ் நாவல்.

இதில் மிக்க ஆச்சரியமுள்ளவையும், நெஞ்சு திடுக்கிடக் கூடியவையும், ஆதிமுதல் அந்தம் வரையில் மனதைக் கவரக் கூடியவையுமான சம்பவங்கள் நிறைந்துள்ளன. இங்ஙனம் பலவித நடவடிக்கைகளுமிருப்பதால், அநேக நீதிகளும், புத்திமதிகளும் தக்க திருட்டாந்த பூர்வகமாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

நமது சிறுவர், சிறுமிகளும், ஸ்திரீகளும் அவசியமாய் உணர வேண்டிய இலௌகீக ஆசார விஷயங்களெல்லாம் ஆங்காங்கு விளக்கிக் கூறப்பட்டிருக்கின்றன. இதன் இனிமையும் அருமையும் வாசிப்போர்களால் முன்னமே புகழ்ந்து கூறப்பட்டிருக்கின்றன. ஆதலால் இதைப்பற்றி நாம் அதிகமாய்க் கூறவேண்டுவதில்லை. இதில் எல்லா ரசங்களும் பூரணமா யிருக்கின்றனவென்று மட்டும் கூறுகிறோம்.

முதல் பாகம் ரூ. 1—12—0 2-ம்பாகம் ரூ. 2—4—0

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை மதராஸ்

# "ஆனந்தபோதினி"

## ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915௵ ஜுலைமீ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகிக ஆசார ஒழுக்கங்களின் சீர்திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானாபிவிர்த்தியையும், பெண் கல்வியையும் நோக்கமாய்க் கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதிசஞ்சிகையிலும், மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எழுதப்பட்ட மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும்விட அதிகமான சந்தாதாரரையுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத்தக்கது. இது நமது நாட்டாரது நன்மை யொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப் படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில், 40 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற்கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட் டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0. மாதிரி காப்பி இனாம்.

### ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இரத்தினபுரி இரகசியம் | ரூ. | அ. | தினகரசுந்தரி | ரூபா 1 | 0 |
| 2-பாகமும் ... | 4 | 0 | தபால்கொள்ளைக்காரர் | 0 | 14 |
| பவளத்தீவு 2-பாகமும் ... | 3 | 0 | பத்மாஸனி ... | 0 | 14 |
| கற்கோட்டை ... | 2 | 0 | வீரநாதன் ... | 0 | 12 |
| மின்சார மாயவன் ... | 1 | 8 | குணசுந்தரன் ... | 0 | 12 |
| தேவசுந்தரி ... | 1 | 4 | மஞ்சள் அறையின் மர்மம் | 1 | 8 |
| கனகபூஷணம் 2-பாகமும் ... | 3 | 8 | கமலசேகரன் ... | 1 | 12 |
| சுவர்ணாம்பாள் ... | 0 | 12 | பூங்கோதை ... | 0 | 10 |
| ஆனந்தஸிங் ... | 2 | 0 | இந்திராபாய் ... | 2 | 8 |
| மதனபூஷணம் ... | 1 | 0 | அமராவதி 2 பாகமும் | 4 | 0 |
| ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்ஸரு | | | மதனாம்பாள் 2 பாகமும் | 3 | 0 |
| டைய சரித்திர உபதேசங்கள் | 1 | 12 | லோகநாயகி | 1 | 0 |

விலாசம் : மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, சௌகார்பேட், மதராஸ்.

Printed at the "Ananda Bodhini" Press Madras.